பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 31 திங்கட்கிழமை 15.05.2023 கதிர் 186

# ரணிலுடன் இன்று மீண்டும் தமிழ் எம்.பிக்கள் பேச்சு

## அதிகாரப் பகிர்வு, அரசியல் தீர்வு குறித்து ஆராயப்படும்



**அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வடக்கு கிழக்குத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் அரசியல் தீர்வு தொடர்பாக இன்று மாலை மீண்டும் பேச்சு நடக்க இருக்கின்றது. கடந்த சனிக்கிழமை நடப்பதாக இருந்த இந்தப் பேச்சு பின்னர் ஒத்திவைக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை இரவு முதல் கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்ட நிலையில் பேச்சு திங்கட்கிழமைக்கு ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.** 2

## இது ரகசியம் அல்ல!

அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்கள். ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியின் இன்றைய நிலையும் அதுதான். எங்கே மக்கள் வீதிக்கு இறங்கி தன்னையும் பதவியைவிட்டுக் கலைத்து விடுவார்களோ என்பதில் ரணிலுக்குச் சந்தேகமோ சந்தேகம். அதனால், பொலிஸார் இது விடயத்தில் உச்சபட்ச விழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

அளவுக்கு மீறிய விழிப்பு நிலை சில சமயங்களில் நகைச்சுவையாகவும் (காமெடி) போய் முடிந்து விடுகின்றது. அப்படித்தான் நடந்திருக்கிறது கொழும்பு நகரின் திடீர் பாதுகாப்பு அதிகரிப்பும்.

வெள்ளிக்கிழ இரவு முதல் கொழும்பில் பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டது. வெளி இடங்களில் இருந்தும் பொலிஸார் 2

## அம்பாறையிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி





மனிதப்பேரவலத்தையும் தமிழ் இனப் படுகொலையையும் நினைவூட்டும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நிகழ்வு அம்பாறையிலும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் அங்கும் கஞ்சி வழங்கப்பட்டது.

வடக்கு கிழக்கு முழுவதும் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் 2

## சஜித் கட்சியைச் சேர்ந்தோரில் பாதிப் பேர் 15 நாள்களில் ஆட்சியில் இணைவார்களாம்

ஐக்கிய மக்கள் சக்தியின் பாதிப்பேர் இன்னும் இரண்டு வாரங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியுடன் இணைந்துகொள்ளவுள்ளனர் என்று அக்கட்சியில் அங்கத்துவத்தினைக் கொண்டிருக்கும் முன்னாள் அமைச்சர் பீ.ஹரீசன் தெரிவித்துள்ளார்.

பகலில் சஜித்துடன் இருப்பவர்கள் இரவில் ரணிலுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுகின்றனர் எனவும் சுட்டிக்காட்டிய அவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிபந்தனையற்ற ஆதரவினை வழங்கவுள்ளார் எனவும் அறிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சித்தலைவராக இருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் 2

## மகிந்தவுக்கு எதிரான போராட்டங்களை தடுக்கவே கொழும்பில் தீவிர பாதுகாப்பு

### நாடாளுமன்ற உறுப்பினனர் விஜித ஹேரத் குற்றச்சாட்டு

மகிந்தவுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கு-வதைத் தடுக்கவே கொழும்பில் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளார் என்று தேசிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பெலவத்தவில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் உள்ள அனைத்துப் பொலிஸாரையும், பாதுகாப்புபடையினரையும் அழைத்து வந்து கொழும்பில் பாதுகாப்பினைப் பலப்படுத்தியுள்ளார்கள்.

மஹிந்த ராஜபக் வைப் பிரதமர் ஆக்குவதற்கு எதிராக மக்கள் வீதியில் இறங்குவதை தடுக்கவே இவ்வாறு பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளார்கள். 2

## இழப்பீட்டை மீண்டும் கணக்கிட நடவடிக்கை

இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றி எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட இழப்புக்களை மீளவும் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தலைவர், சட்டத்தரணி அசேல ரெக்கவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயினால் நாட்டின் கடல்வளத்திற்கு ஏற்பட்ட சேதங்கள் கடந்த வருடம் நவம்பர் 30 வரை மாத்திரமே கணக்கிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த ஏப்ரல் 30 வரையான காலப் பகுதிக்குள் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் இலங்கைக்கு ஏற்பட்ட சேதங்களைக் கணக்கிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2

## ஜனாதிபதி - ரணில், பிரதமர் - பஸில் இதுதான் திட்டம் என்கிறார் ரத்ன தேரர்

2024ஆம் ஆண்டு ஜனாதிபதியாக ரணிலும் பிரதமர் பதவியில் பஸிலும் இருப்பார்கள் என்ற நிலைப்பாடு பொது ஜன பெரமுன கட்சியுள்ள பலருக்குத் தோன்றியுள்ளதாக மேலவை இலங்கை கூட்டணியின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள மேலவை இலங்கைக் கூட்டணியின் காரியாலயத் தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தபோது எவரும் ஆட்சியை ஏற்க முன்வரவில்லை என ஆளும் தரப்பினர் குறிப்பிடுவது அடிப் படையற்றது. நாட்டு மக்கள் ராஜபக்ஷக்களை முழுமையாகப் புறக்கணித்த பின்னணியில் ராஜபக் ஷக்களை பாதுகாப்பதற்காக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

மக்களால் கடுமையாக வெறுக்கப்பட்ட ராஜபக்க்கள் மீண்டும் மக்கள் மத்தியில் செல்வதற்கான பாதுகாப்பான சூழலை ஜனாதிபதி 2

## மண் சரிவு எச்சரிக்கை

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 5 மாவட்டங்களில் மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சிநிறுவனம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள பல பிரதேசசெயலகங்களுக்கு 24 மணித்தியாலங்களுக்கு இந்த எச்சரிக்கை அமுலில் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தின் பிடபெத்த பிரதேசசெயலகப் பிரிவுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பும், அக்கு ரஸ்ஸ, அதுரலிய, பஸ்கொட, முலட்டியன, கொட பொல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு முதல் நிலை மண்சரிவு 2

## ஹரீனுடன் இணையும் சுரேஷ்



நேரம் வருகின்றபோது நானும் அமைச்சர் ஹரீனும் ஒன்றிணைந்து ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிடுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் தலைவருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பதுளையில் ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ தலைமையில் காணி 2

## ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை இலங்கை மீளப்பெற ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு

### இப்படிச் சொல்கிறார் அயலுறவுத் துறை அமைச்சர்



ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை மீள விண்ணப்பிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் மூத்த அதிகாரியும் ஐரோப்பிய ஆணைக் குழுவின் பிரதித் தலைவருமான ஜோசப் பொரெல் தன்னிடம் உத்தர வாதம் வழங்கினார் என்று அயலுறவுத்துறை அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய வெளிவிவகார செயற்பாட்டுப் பிரிவுடன் இணைந்து 2

## அறிக்கை தயாரிப்பு

கொழும்புத் துறைமுகச் சுங்கத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தொடர்பில் விசேட அறிக்கையொன்றை தயாரித்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை காலையில் நடைபெற்ற நிழகழ்வின் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் ஒவ்வொரு கொள்கலனும் மூன்று வகைக்குள் அடங்கும். அவற்றுள் ஆபத்தானவை என்று கருதப்படுபவை தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. கொள்கலன்களை விடுவிக்க சுங்கம் 24 மணிநேரமும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள நெரிசலுக்கு முக்கிய காரணம். சிங்கள புத்தாண்டு மற்றும் வெசாக் விடுமுறைகள் தான். 2

## ஆஸ்திரேலியாவிடமிருந்து இலங்கைக்கு விமானம்

ஆஸ்திரேலிய அரசு தனது விமானப்படைக்குச் சொந்தமான பீச் கிராப்ட் கே.ஏ.350 ரக விமானம் ஒன்றை (பதிவிலக்கம் - யு32 - 673) இலங்கைக்கு அன்பளிப்புச் செய்வதாக அறிவித்துள்ளது.

இந்த விமானத்தை வழங்குவது தொடர்பாக ஆஸ்திரேலிய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கிளேர் ஓ நீல் அளித்த கடிதத்தை இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஆணையர் பௌவுல் ஸ்டெபனினால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

அவுஸ்திரேலிய பிரதி உயர்ஸ்தானிகர் லலிதா கபூர், முதன்மைச்செயலாளர் பிரெட் செஹண்டர் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் கெப்டன் இயன் கேன் உள்ளிட்டவர்களும் உடனிருந்தனர்.

பீச் கிராப்ட் என்பது நவீன இரட்டை இயந்திரத்தினைக் கொண்ட விமானம் ஆகும். இந்த அன்பளிப்பு இலங்கையின் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தும் என்று குறித்த 2

## கொழும்புப் பல்கலை அபிவிருத்திக்கு 10 ஆண்டு திட்டம் கேட்கிறார் ரணில்

செயற்கை நுண்ணறிவு போன்ற தொழிநுட்ப வளர்ச்சியுடன் உலகம் முழுவதுமே அறிவுப் புரட்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் கொழும்புப் பல்கலைக்கழகம் பத்தாண்டு கால அபிவிருத்தித் திட்டத்தை முன்வைத்தால் அதற்கு இந்த ஆட்சி ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2023ஆம் ஆண்டுக்கான பழைய மாணவர்களின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கத்தின் 40 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு சிகரம் விருது வழங்கும் விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாட்டுக்கும் சமூகத்திற்கும் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கும் தனித்துவமான பணியை ஆற்றும் பழைய மாணவர்களை பாராட்டும் வகையில் வழங்கப்படும் முதலாவது விருது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மல்வத்து அனுநாயக்க வண, திம்புல்கும்புரே விமல தம்ம தேரர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், பேராசிரியர் ஜே.பி. திசாநாயக்க, திலக் கருணாரத்ன உள்ளிட்ட 11 பேர் இங்கு விருதுகளைப் பெற்றனர்.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொண்டு வந்து குவிக்கப்பட்டார்கள். தரைப் படையினர் பாதுகாப்புக் கடைமைக்கு அழைக்கப்பட்டார்கள். குறிப்பாக கொழும்புப் பல்கலைக்கழகத்தை அண்டிய பகுதிகளில் பொலிஸாரும் படையினரும் குவிக்கப்பட்டார்கள். ஆங்காங்கே பல இடங்களிலும் திடீர் சோதனைகள்தீவிரப்படுத்தப்பட்டன.

முதலில் நாடு முழுவதும் இந்த மாதிரியான நடவடிக்கைகள், பாதுகாப்புப் பலப்படுத்தல்கள், திடீர் சோதனைகள் நடத்தப்படுவதாகத் தெரிவித்தார்கள். ஆனால், கொழும்பைத் தவிர்த்து வேறு எந்தப் பகுதியிலும் இந்தளவு தீவிரமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிந்தது. பின்னர், கொழும்புப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சில குழுக்கள் போராட்டம் என்கிற பெயரில் கலகம்ஏற்படுத்தத்தயாராகின என்றும்அதனைத்தடுக்கவே இந்த ஏற்பாடு என்றும் சொன்னார்கள்.

சுமார்1500பேர்கொண்ட குழு ஒன்று இப்படிக் கலகம் செய்வதற்குத் தயாராகி வருகின்றது என்ற தகவலையும்கசியவிட்டதுடன், அந்தக் கும்பலின் முயற்சியைத் தாம் தோற்கடித்துள்ளார்கள் என்று வேறு பெருமையடித்துக்கொண்டார்கள். பல்கலைக்கழக வட்டாரங்களுக்கும், அங்கே போராட்டங்களுக்குத் தலைமை தாங்குபவர்களுக்கும்கூட இதுபெரும் அதிர்ச்சியாக இருந்தது. முன்னணியில்உள்ளபோராட்டக்காரர்களுக்கெல்லாம் தமக்குத் தெரியாமல் அப்படி யார் கலகம் செய்யத் தயாராகினார்கள் என்கிற பரபரப்பு. எல்லோரும் விழுந் தடித்துக்கொண்டு தேடினாலும் எங்கும் எதிலும் அப்படியொரு போராட்டம் அல்லது கலகம் நடப்பதற்கான வாய்ப்புக்களே தெரியவில்லை.

கொழும்பு முழுவதுமே பொலிஸாரும் படையினரும் குவிக்கப்பட்டு தீவிர சோதனைகள் வேறு நடத்தப்படுகின்றன என்பதால் கலகம் பற்றிய செய்தியை நம்பாமலும் இருக்க முடியவில்லை. ஆளை யாள் தொடர்புகொண்டு நீ ஏதாவது செய்கிறாயா என்று விசாரித்தால் எல்லோரிடமும் ஒரே பதில்தான். இல்லை, எங்களுக்கு எதுவும் தெரியாது. கடைசியில் தேடித் தேடி உண்மை என்ன என்பதைக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

கொழும்புப் பல்கலைக் கழத் திலிருந்து வெள் ளிக் கிழமை இரவு 1500 உணவுப் பொதிகளுக்குத ஒரு கொள்முதல் கட்டளை வழங்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தகவல் பொலிஸ் புலனாய்வாளர்களுக்கும் கிட்டியிருக்கிறது. பல்கலைக் கழகத்திற்கு ஏன் திடீரென 1500 உணவுப் பொதிகள் என்கிற கேள்வி பொலிஸாரின் பாதுகாப்புக் கண்களை அகல விரித்திருக்கிறது. யாரோ பல்கலைக்கழகத்திற்குள் இருந்து எதுவோ செய்யப்போகிறார்கள் என்று விழிப்படைந்து விட்டார்கள். உடனே எல்லோரையும் விழிப்புநிலைக்குக் கொண்டு வந்து தரைப் படையினரையும் அழைத்துக் கொண்டு பாதுகாப்பைத்தீவிரப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள்.

அது பார்த்தால் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிகழ்வு ஒன்றுக்காக மாணவர்களுடன் சேர்த்து அவர்களது பெற்றோர்களும் இந்தத் தடவைஅனுமதிக்கப்பட்டதால் அவர்களின் தேவைக்காகவே இந்த 1500 உணவுப் பொதிகளும் தருவிக்கப்பட்டிருக்கின்றனவாம். அதைத் தவிர போராட்டத்திற்கோ கலகத்திற்கோ எந்த முயற்சிக்களும் அங்கிருக்கவில்லையாம். முயற்சி என்ன அது பற்றிய சிந்தனையேஇருக்கவில்லை என்கிறார்கள்.

நன்றாக மூக்குடைபட்டுப் போன பொலிஸாரிடம் கொழும்பில் உள்ள செய்தியாளர்ஒருவர் இந்தவிவரத்தைக் குறிப்பிட்டுக்கேட்டபோது, அது நாங்கள் இப்படிப்பட்ட அவசர நிலையில் பொலிஸாரின் உதவிக்கு தரைப் படையினரை அழைத்தால்அவர்கள்உடனே வருகிறார்களா என்கிற ஒத்திகைதான் பார்த் தோம் என்றார்களாம். விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லைத்தான் போங்கள்....

- இடிமின்னல் -

## ரணிலுடன் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதிகாரப் பகிர்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் மே 11, 12, 13 ஆகிய மூன்று தினங்களும் வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசுத் தலைவர் பேச்சு நடத்து வார் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. அதற்கு முன்னேற்பாடாக, தமிழ் அரசுக் கட்சிப் பிரதிநிதிகளை மே 9 அரசுத் தலைவர் சந்தித்துப்பேசினார்.

அந்தச்சந்திப்பின்பின்னர் மே 11 நல்லிணக்க விடயங்கள் (உடனடிப்பிரச்சினைகள்) தொடர்பாகவும் மறுநாள் அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும் பேசுவது என்று முடிவு செய்யப்பட்டது. அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்கள் முடிவடையாதபட்சத்தில் மே 13 மூன்றாவது நாளும் தொடர்ந்து பேசுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் மே 11 வியாழக்கிழமை அரசுத் தலைவர் செயலகத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் பேச்சு நடைபெற்றது. அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணிகள் அபகரிப்பின் நிறுத்தம், காணாமற் போனோர் தொடர்பான விவகாரம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகிய ஐந்து விடயங்கள் குறித்து அங்கு ஆராயப்பட்டன. இதில் முன்னேற்றகரமான தீர்மானங்கள் எவையும் எடுக்கப்படவில்லை என்றாலும் காணிஅபகரிப்பைநிறுத்துவது தொடர்பில்அரசுத்தலைவரால் வாக்குறுதிகள்வழங்கப்பட்டன. ஏனையவிடயங்களில்இதற்கு முன்னர் நடந்த பேச்சுக்களில் கூறப்பட்டவையே மீண்டும் வலியுறுத்தப்பட்டன.

இதைத் தொடர்ந்து அதிகாரப் பகிர்வு தொடர்பில் மறுநாள் ஆராயப்பட இருந்த சந்திப்புத் திடீரெனப் பிற்போடப்படுவதாக அரச தலைவர் செயலகம் அறிவித்தது. இன்று மாலை 5 மணிக்கு அந்தப் பேச்சு இடம்பெறும். தீர்வு தொடர்பில் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில்இந்தப்பேச்சு இடம்பெறும் என்று தமிழ் அரசுக் கட்சிப் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

## அம்பாறை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும்நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு, இடம்பெற்று வருகின்றன. இந்தவரிசையில் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அம்பாறை திருக்கோயில் பிரதான சந்தை வளாகத்தில் கஞ்சி வழங்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தினருடன் இணைந்து கஞ்சி வழங்கப்பட்டது. கஞ்சி காய்ச்சுவதற்கானஅரிசிதிருக்கோயில்பகுதியில் உள்ள மக்களிடமிருந்து இரந்துபெறப்பட்டது. வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரும் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்துஒருபிடிஅரிசியை பெற்று முள்ளிவாய்க்கால் கஞ்சியைக் காய்ச்சினர்.

திருக்கோயில் சந்தை பகுதியைத் தொடர்ந்து அம்பாறைவிநாயகபுரம்மாணிக்க பிள்ளையார்ஆலயவளாகத்திலும் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சியும் துண்டறிக்கைகளும் விநியோகிக்கப்பட்டன. பொத்துவில் சாலம்பையடி பிள்ளையார் ஆலயத்தின் முன்பாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

பொத்துவில் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கப்பட்ட பகுதிக்கு திடீரென ஜீப் வாகனத்தில் வந்த பொலிஸார் மாணவர்களிடம் என்ன நடக்கிறது என்பது தொடர்பில் விசாரணைநடத்தினர்.பின்னர் சற்றுநேரம்கண்காணிப்பிலும் ஈடுபட்டனர். திடீரென அப்பகுதிக்கு இராணுவ சீருடையில் ஒருவர் வருகைதந்து நோட்டமிட்டார் என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வடக்குப் கிழக்கினை மையப்படுத்திமுன்னெடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் அம்பாறையில் நிறைவு பெற்ற நிலையில் தொடர்ச்சியாக இன்று முதல் யாழ்ப்பாணத்ததில் உள்ள பாடசாலைகளில் நினைவுக் கஞ்சி பகிரப் படவுள்ளது.

## சஜித் கட்சியைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செயற்பாடுகள் தொடர்பில் எமக்குத் திருப்தியில்லை. நாட்டின் எதிர்காலம் தொடர்பிலான விடயத்தில் அவர் கொண்டிருக்கின்ற பொதுச் சிந்தனைகள் தொடர்பில் எமக்கு பெரும் அதிருப்தி இருக் கிறது.

கடந்த தேர்தலில் நாம் ஜனாதிபதி வேட்பளராக களத்தில் நின்ற சஜித் பிரேமதாசவுக்காகவே பணியாற்றினோம். இருப்பினும் அவரால் வெற்றி பெற முடியவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனத்தின் ஊடாக நாடாளுமன்ற உறுப்புரிமையை எடுத்த ரணில் விக்கிரமசிங்க பிரதமராகி, ஜனாதிபதியாகி விட்டார்.

அவர் பதவியை ஏற்கின்றபோது, நீண்ட வரிசைகள்கணப்பட்டன. பொருட்களுக்காக 12 முதல் 15மணித்தியாலங்கள் வரையில் காத்திருக்கும் சூழல் இருந்தது. இறப்புக்கள் நிகழ்ந்தன. இருப்பினும் அவர் பதவியை ஏற்று சொற்ப காலத்தில் அந்த நெருக்கடியானநிலைமையை மாற்றியமைத்தார்.

இவ்வாறான நிலையில் அடுத்தவரும் ஜூன் மாதத்திற்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும். அவருக்காக நாம்நிபந்தனையற்ற ஆதரவு வழங்கி அவரை வெற்றிபெறச் செய்யவுள்ளோம்.

மேலும், சஜித் பிரேமதாச, தனது கட்சியில் இருந்து எவரும் இந்த ஆட்சியில் இணையமாட்டார்கள் என்று கூறுகின்றார். ஆனால் பகலில் சஜித்துடன் இருப்பவர்கள் இரவில்ஜனாதிபதிரணிலுடன் கலந்துரையாடுகின்றார்கள். ஐக்கிய மக்கள் சக்தியின் அரைவாசிப்பேர் அடுத்த இரு வாரத்திற்குள் இந்த ஆட்சியில் இணையவுள்ளனர் - என்றார்.

## மகிந்தவுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதிகாரங்களை தக்கவைப்பதற்கும், அதுதொடர்பில்தீர்மானங்களை எடுப்பதற்காகவும் இவ்விதமான உயர்பாதுகாப்பு செயற்பாடுகள் பலத்த செலவீனங்களுடன் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆகவே ஜனநாயரீதியில் குரல்கொடுக்கும் மக்களுக்கு ஏதாவது நடந்தால் அதற்கான பொறுப்பினை இந்த ஆட்சியே ஏற்றுக்கொள்ளவேண்டும் - என்றார்.

## இழப்பீட்டை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பணிப்புரைக்குஅமைய இந்த அறிக்கைதயாரிக்கும்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதியகணக்கீடுகளின்பின்னர் சேதங்களுக்கான முழு இழப்பீட்டுத் தொகையானது தற்போது மதிப்பிடப்பட்டுள்ள சுமார் 6.5 பில்லியன் டொலர் களைவிட மேலும் அதிகரிக்கலாம்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால்ஏற்பட்டசுற்றாடல் பாதிப்புகளுக்கு இழப்பீடுகோரி சிங்கப்பூர் நீதிமன்றத்தில் இலங்கை அரசு கடந்த மாதம் தொடுத்த வழக்கு மீதான விசாரணை இன்றையதினம் மீண்டும் எடுத்துக்கொள்ளப் பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேசிய தேர்தல் தொடர்பில் ராஜபக் குடும்பத்துக்குள்நான்கு வேறுபட்ட நிலைப்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

முதலாவது தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இரண்டாவது தரப்பினர் பஸில் ராஜபக்வுக்கும், மூன்றாவதுதரப்பினர் நாமல் மற்றும் மஹிந்த ராஜபக்ஷ வுக்கும், நான்காவது தரப்பினர் பஸில் ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ வுக்கும் ஆதரவாகச் செயற்பாடும் நிலைப்பாட்டில் உள்ளார்கள்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன ஆகியகட்சிகள் ஒன்றிணைந்து பொது வேட்பாளராகரணில்விக்கிரம சிங்கவைக் களமிக்கவும், அதே ஆண்டு இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் பஸில்ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக களமிறக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொது ஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் நடவடிக்கைகளைத் தொடங்கிவிட்டனர்.

நாடு ஏன் வங்குரோத்து நிலையை அடைந்தது, பொருளாதார பாதிப்பில் ராஜபக்ஷக்களின் வகிபாகம் என்னவென்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஆகவே 2019ஆம் ஆண்டு அரசியல்ரீதியில்செய்ததவறை மக்கள் மீண்டும் செய்ய மாட்டார்கள் - என்றார்.

## மண் சரிவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எச்சரிக்கை அறிவிப்பும் வழங்கப்பட்டுள்ளன.

காலி மாவட்டத்தின் நாகொட, நெலுவ, பத்தேகம, யக்கலமுல்ல, எல்பிட் டிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்ல பிரதேச செயலகப் பிரிவுக்கும் முதல் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், களுத்துறை மாவட்டத்தின் வலல்லாவிட்ட, பாலிந்தநுவர மற்றும் இரத்தினபுரிமாவட்டத்தின்கிரியெல்ல மற்றும்எஹெலியகொடஆகிய பிரிவுகளுக்கும் மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சிநிறுவனம்தெரிவித்துள்ளது.

அத்துடன், நிலம் தாழிறங்கல், கற்பாறை சரி தல், மண்மேடு சரிதல், நிலத்தில் வெடிப்பு ஏற்படுதல் உள்ளிட்டவை தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வங்காள விரிகுடா கடற்பகுதிக்கு மறு அறிவித்தல் வரை செல்ல வேண்டாமென வளிமண்டலவியல் திணைக்களத்தினால் மீனவர்கள் எச்சரிக்கப் பட்டுள்ளனர். அத்துடன் நாட்டின்சிலபகுதிகளில்இன்றைய தினமும் 75 மில்லிலீற்றர் வரையில்பலத்தமழைவீழ்ச்சி பதிவாகக் கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

## ஹரீனுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உறுதிப்பத்திரங்களை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் இந்த நிகழ்விற்கு வருகை தந்துள்ளமையை சிலர் அதிசயமாகப் பார்க்கின்றார்கள். அவ்வாறு பார்ப்பதற்கு எதுவுமில்லை. அமைச்சர் ஹரீன் சிறப்பாக செயற்படுவதில் வல்லவர். அவருடன்தான் நான் இணைந்து தேர்தலில் போட்டியிட்டேன். எதிர்காலத்திலும் அவ்வாறானநிலைமைதான் நடைபெறவுள்ளது.

நேரம் வரும்போது, நானும் அமைச்சர் ஹரீனும் இணைந்துசெயற்படுவோம். எனக்குகட்சி,சின்னம்எல்லாம் பிரச்சினை இல்லை. நான் ஹரீனின் கட்சி என்பதுதான் இப்போதைய விடயம்.

அத்துடன் அவர் எமது தொழிற்சங்கத்தின் செயலாளராகவும் உள்ளார். ஆகவேதலைவரும்செயலாளரும் வேறுவேறு பக்கத்தில் நின்று செயற்படமுடியாது. ஆகவே நாம் மீண்டும் இணைவோம். ஒன்றாக பதுளையில் போட்டியிடுவோம் - என்றார்.

## ஜி.எஸ்.பி. .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சுவீடனால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த இரண்டாவது இந்தோ - பசுபிக் பிராந்திய அமைச்சர் மட்ட மாநாடு சனிக்கிழமை சுவீடனின் ஸ்ரொக்ஹோம்நகரில் நடைபெற்றது.

இதன்போது பக்கநிகழ்வொன்றில் ஐரோப் பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பான மூத்த அதிகாரியும் ஐரோப்பிய ஆணைக்குழுவின் பிரதித் தலைவருமான ஜோசப் பொரெலை சந்தித்து அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, தலைமையிலான இலங்கைக்குழுவினர் கலந்துரையாடினார்.

இலங்கையின் அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்தை முன்னிறுத்தி இதுவரை காலமும்ஐரோப்பியஒன்றியத்தினால் வழங்கப்பட்டு வந்த உதவிகளுக்கு அமைச்சர் நன்றிதெரிவித்தார். குறிப்பாக, கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதிலும், பொருளாதார நெருக்கடியை உரியவாறு கையாள்வதிலும் ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட உதவிகள் பெரும்பங்களிப்பாகஇருந்தன என்றார்.

ஐரோப்பிய ஒன்றியம் எப்போதும் இலங்கையின் வலுவான வர்த்தகப் பங்காளியாக திகழும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. அதே நேரம், ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை பெற்றுக் கொள்வதற்கு மீள விண்ணப்பிக்கும் செயன்முறையில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளது.

ஐரோப்பிய ஆணைக் குழுவின் பிரதித் தலைவர் ஜோசப் பொரெல் இது தொடர்பில் எனக்கு உத்தரவாதமளித்துள்ளார். பொருளாதார மீட்சி, நல்லிணக்கம் மற்றும் ஜனநாயகப் பாதுகாப்பு ஆகிய விடயங்களில் இலங்கையினால் எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு வெளியிட்டுள்ளது - என்றார்.

## ஆஸ்திரேலியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கடிதத்தில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச குற்றச்செயல்களைஎதிர்த்துப்போராடுவதில் இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பை இது உறுதிப் படுத்துவதுடன், கடல் மார்க்கமாக இடம்பெறும் மனித கடத்தலை எதிர்க்கும் செயல்முறைக்கு பரந்த பங்களிப்பை இதன் மூலம் வழங்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல்சார் குற்றங்களுக்கு எதிராக இலங்கை வழங்கும் ஆதரவைஅவுஸ்திரேலியஅரசு மிகவும் பாராட்டுவதாகவும், ஆட்கடத்தல்செயல்பாடுகளை குறிப்பிடத்தக்க அளவில் மட்டுப்படுத்துவதற்கும், கடல் கொள்ளை மற்றும் பாது காப்பற்ற கடற்பிரயாணங்களிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கும் இரு நாடுகளுக்கிடையேயான இந்த ஒத்துழைப்பு வேலைத்திட்டம், காரணமாக அமைந்துள்ளது எனவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்பளிப்புச் செய்யப்பட வுள்ள விமானத்தின் செயற்பாடுகள் குறித்து அவுஸ்திரேலிய அரசு 12 மாத காலம் இலங்கைக்கு உதவிகளைவழங்கவுள்ளது, அதன்பின்னர் அதன் பொறுப்புக்கள் இலங்கை அரசிடம் கையளிக்கப்படவுள்ளது.

## கொழும்புப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முழுமையானபல்கலைக்கழகக் கட்டமைப்பிலும் நவீனமயப்படுத்தலின் தேவை ஏற்பட்டுள்ளது. கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குவழங்கக்கூடிய உடனடித் தீர்வுகளைக் கண்டறிவதற்கு கொழும்பு பல்கலைக்கழக பழைய மாணவர்கள் முன் வரவேண்டும்.

இந்தப் பத்து வருட கால அபிவிருத்தித் திட்டத்தை விரைவில் தயாரிப்பதற்கு பல்கலைக்கழக பழைய மாணவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு செய்யாவிட்டால் கொழும்பு பல்கலைக்கழகம்அந்தவிசேட செயற்பாட்டிற்கு பங்களிக்கும் வாய்ப்பை இழக்க நேரிடும் - என்றார்.

இந்நிகழ்வில்பேராசிரியர் மைத்திரிவிக்கிரமசிங்கமற்றும் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எச்.டி.கருணாரத்ன, பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் ஜே.எம்.எஸ்.பண்டார உள்ளிட்ட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.


## அறிக்கை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆனால்சுங்கத்தில்வேறொரு சூழல் உருவாகியுள்ளதாக சில தகவல்கள் எனக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம்மைப் பொறுத்தவரையில், சட்டவிரோத செயல்களுக்கு அனுமதிக்க முடியாது. அனைத்தையும் கண்டுபிடிப்போம். தற்போது ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் அது குறித்த அறிக்கையை தயாரித்து வருகிறேன். எதிர்வரும், 31ஆம் திகதி அறிக்கை கையளிக்கப்படவுள்ளது.

தவறுகளைக் கட்டுப்படுத்துவதற்கானபுதியவழிகளைக் கண்டுபிடிக்கும்போது, தவறுகளைச் செய்வதற்கான புதிய வழிகளும் கண்டுபிடிக்கப்படுகின்றன. எல்லாவற்றையும் கூர்ந்து கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622






காலைக்கதிர் Kalaikkathir

# கடன் மறுசீரமைப்பு ஒரு சத்திர சிகிச்சை போன்றது; ஒரே முறையில் சரியாகச் செய்து முடிப்பது அவசியம்

## பொருளியல் நிபுணர்கள் கருத்து

சர்வதேசநாணயநிதியத்துடனானஇணக்கப்பாட்டுக்கு அமைவாக தேசிய கடன்களை மறுசீரமைப்பது மிகக் கடினமான விடயம் என்று சுட்டிக்காட்டியுள்ள பொருளியல் நிபுணர்கள், இருப்பினும் கடன் மறுசீரமைப்பு என்பது ஒரு சத்திர சிகிச்சையைப் போன்றது என்றும்,அதனைஒரேமுறையில் சரியாக செய்து முடிக்க வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி செயற்திட்டத்தின் கீழ், சுமார் 3 பில்லியன் டொலர் கடன் உதவியை பெற்றுக் கொள்வதற்கான இறுதிக்கட்ட இணக்கப்பாடு கடந்த மார்ச் மாதம் எட்டப்பட்ட நிலையில், கடன் மறுசீரமைப்பு குறித்த செயற்றிட்டத்தை ஏப்ரல் மாத இறுதிக்குள் வெளியிடுவதற்கு எதிர்பார்த்திருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இருப்பினும், எதிர்பார்க்கப்பட்டதைப்போன்று அந்தச் செயற்றிட்டம் கடந்த மாதம் வெளியிடப்படவில்லை. இந்நிலையில், இம்மாத இறுதிக்குள் கடன் மறுசீரமைப்புச் செயற்றிட்டம் வெளியிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கடந்தவாரம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் தேசிய கடன் மறுசீரமைப்பு என நோக்குகையில், மத்திய அரசாங்கத்தின் ஊடாக தேசிய சந்தையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களையே இலங்கை அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியமும் தேசிய கடன்களாக கருதுவதாக சுட்டிக்காட்டியுள்ள இலங்கைமத்தியவங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் கலாநிதி டபிள்யூ.ஏ. விஜேவர்தன, இருப்பினும் மத்திய அரசாங்கத்தால் பெறப்பட்ட கடன்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் கடன்கள், அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனங்களால் பெறப்பட்ட கடன்கள், மத்திய வங்கி உள்ளடங்கலாக அரச வங்கிகள் பெற்ற கடன்கள், அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் சமூக பாதுகாப்பு நிதியங்களுக்காக பெறப்பட்ட கடன்கள் மற்றும் அரசாங்கத்தின்பரிந்துரைக்கு அமையதனியார்நிறுவனங்களிடமிருந்துபெறப்பட்டகடன்கள் என அனைத்தையும் அரச கடன்களாகவே கருத வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி, அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டுள்ள தேசிய வருமானத்துக்கும் உண்மையான வருமானத்துக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுவதாகவும், இவ்வாறானதொரு சூழ்நிலையில் தேசிய கடன்களை மறுசீரமைப்பது கடினமான விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடன் மறுசீரமைப்பை ஒரு சத்திர சிகிச்சையுடன் ஒப்பிட்டுக் காண்பித்துள்ள அட்வகாட்டா அமைப்பின் பொருளியல் ஆய்வாளர்கனிஷ்கவேரவில, - உயிரை காப்பதற்கு சத்திர சிகிச்சை இன்றியமையாதது என்பதுடன் அதனை ஒரே தடவையில் சரியாகச் செய்து முடிக்கலாம் எனும் போதுதான் நாம் அந்தத் தெரிவுக்குச் செல்வோம். அதே போன்றுதான் கடன் மறுசீரமைப்பின்றி பொருளாதார ரீதியில் முன்நோக்கிப் பயணிக்க முடியாது என்பதுடன் அதனை ஒரே முறையில் சீராக செய்ய முடியும் எனும் போது அத்தெரிவுக்கு செல்ல வேண்டும் - என்று சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, தற்போது நாம் தேசிய மற்றும் சர்வதேச கடன் களை மறுசீரமைப் பதற்கு தீர்மானித்துள்ளநிலையில்,அதனை மீண்டும்மீண்டும்பலமுறை செய்ய முடியாது என்றும் ஒரேதடவையில்உரியவாறு மேற் கொள்ளவேண்டியது அவசி யம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ஆதி லிங்கேஸ்வரர் ஆலய பூசாரியிடம் நெடுங்கேணி பொலிஸார் விசாரணை!

## ஆறு.திருமுருகனிடமும் யாழில் விசாரணை



வெடுக்குநாறிமலைஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசாரியிடம் நெடுங்கேணி பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வெடுக்குநாறி மலை ஆலயத்தின் பூசாரி மற்றும் நிர்வாக உறுப்பினர் ஒருவர் நெடுங்கேணி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நிலையில் வவுனியா நீதிமன்றத்தால் வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து சனிக்கிழமை விசாரணையொன்றுக்காக பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு ஆலயத்தின் பூசாரி மற்றும் அவரது மனைவியை நெடுங்கேணி பொலிஸார் அழைத்துள்ளனர்.

பொலிஸ்நிலையத்துக்கு சென்ற அவ்விருவரிடமும் பொலிஸார்சிலகேள்விகளை வினவினர்.

2019ஆம் ஆண்டு மலையில் ஏணிப்படி வைத்தது யார், அதற்கு நிதி வழங்கியது யார் போன்ற விடயங்களை பற்றி கேட்டு மூன்று மணிநேரத்துக்கு மேல் விசாரணை நடத்தியுள்ளனர்.

அதனையடுத்து, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஆலய பரிபாலன சபையின் போசகர் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

மேலும், சிவபூமி அறக் கட்டளையின்ஸ்தாபகர்ஆறு. திருமுருகனிடம் யாழில் வைத்துநெடுங்கேணிபொலிஸார்விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர்.

இதன்போது புதிதாக வழங்கப்பட்ட விக்கிரகங் கள் தொடர்பிலும் விசாரிக்கப்பட்டது.

இந்நிலையில், எங்கள் மீதான விசாரணைகளே தொடர்ந்துகொண்டிருக்கிறது. ஆனால்,ஆலயவிக்கிரகங்கள் உடைத்தழிக்கப்பட்டசம்பவம் தொடர்பில் எந்த சந்தேக நபரையும் நெடுங் கேணி பொலிஸார் கைதுசெய்யவில்லை. யாரும் விசாரிக்கப்படவும் இல்லை என்று ஆலய நிர்வாகத்தினர் இந்த விடயம்தொடர்பாக ஆதங்கப் படுகின்றனர்.

# லக்சம்பேர்க்குடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்து!



இலங்கை லக்சம்பேர்க்குடன் இருதரப்பு ஆலோசனைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற இரண்டாவது ஐரோப்பிய யூனியன் இந்தோ - பசுபிக் அமைச்சர்கள் மன்றத்தின் ஒரு பகுதியாக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இதன்பின்னர் லக்சம்பேர்க் வெளிவிவகார அமைச்சர் ஜீன் அசெல்போர்னுடனும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின் போது விமான சேவைகள் தொடர்பான ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவது மற்றும் வர்த்தகம், முதலீடுகள் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# பிடபெத்தர - தெனியாய வீதியில் இரு வர்த்தக நிலையங்களில் தீ!

பிடபெத்தரை- தெனியாய வீதியிலுள்ள இரண்டு வர்த்தக நிலையங்களில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை தீப்பரவல் ஏற்பட்டதாக பிடபெத்தர பொலிஸார் தெரி வித்தனர்.

முதலில் ஒரு வர்த்தக நிலையத்தில் இன்று அதிகாலை தீ பரவியதாகவும், பின்னர் பக்கத்து கடைக்கும் தீ பரவியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ பரவலுக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

# தனிமையில் உறங்கிக் கொண்டிருந்த 32 வயதுடையவர் மீது வாள்வெட்டு!

முதுன்கொடபிரதேசத்தில்கைவிடப்பட்ட வீடு ஒன்றில் தனிமையில் உறங்கிக் கொண்டிருந்த 32 வயதுடைய நபரொருவர் ஒரு குழுவினரால் கோடரியால் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளார் என ஹுரிகஸ்வெள பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) இடம்பெற்றுள்ளது.

முதுன்கொட ஹுரிகஸ்வெள பிரதேசத்தில் வசிக்கும் துசித குமார (வயது - 32) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் அப்பகுதியில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். தொம்கொட பிரதேசத்தில் கைவிடப்பட்ட வீடொன்றில் உறங்கிக் கொண்டிருந்த போதே குறித்த நபர் சிலரால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலை தொடர்பாக, அந்த பகுதியை சேர்ந்த இருவர் விசாரணைக்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹுரிகஸ்வெள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


# ஒரேவீட்டில் தங்கியிருந்த 4 சிறுவர்கள் காலி நெலுவ பொலிஸ் பிரிவில் மாயம்!

நெலுவ தெல்லவ, மியனவத்துர பகுதியில் ஒரே வீட்டில் தங்கியிருந்த பல குடும்பங்களைச் சேர்ந்த நான்கு சிறுவர்கள் சனிக்கிழமை இரவு முதல் காணாமல்போயுள்ளனர்எனமுறைப்பாடுகிடைத்துள்ளதாகநெலுவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு வயது முதல் 13 வயதுடைய நான்கு சிறுவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இந்தச் சிறுவர்களின் பெற்றோர்கள் நெலுவ பிரதேசத்திலுள்ள தோட்டங்க ளில் தற்காலிகமாக பணிபுரிவதற்காக மியனவத்துர பிர தேசத்தில் வாடகை வீட்டில் தங்கியிருந்த நிலையிலேயே சனிக்கிழமை இரவு முதல் பிள்ளைகளை காணவில்லை என பெற்றோர் பொலிஸின் 119 இற்கு தகவல் வழங்கியுள்ளனர்.

காணாமல்போனசிறுவர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவலும் இல்லை என்பதுடன் காலி மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஷான் விஜேசிங்கவின் பணிப்புரைக்கமையநெலுவ பொலிஸார் விசேட பொலிஸ் குழுக்களை நியமித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# நாட்டில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 16,853 ஆக உயர்வு!

இலங்கையில் கொவிட் - 19 தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16,853 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 12 ஆம் திகதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் மேலும் 2 கொவிட் - 19 மரணங்கள் உறுதிசெய்யப்பட்டதையடுத்தே இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொவிட் - 19தொற்றுக்குள்ளானமேலும் 8 பேர் சனிக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அரசாங்க தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, இலங்கையில் 672,283 பேர் கொவிட் - 19 தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மட்டக்களப்பு நகரில் கசிப்புடன் பெண் உட்பட நால்வர் கைது

மட்டக்களப்பு,நாவற்குடா நொச்சிமுனை 5 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள 34, 750 மில்லி லீற்றர் கசிப்புடன் பெண்ணொருவர் உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி எச்எம்.சியாம் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிற்குட்பட்ட நொச்சிமுனையில் இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில் மாவட்ட ரகசிய தகவல் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய போதவஸ்துஒழிப்புபிரிவினர் சனிக்கிழமை மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின்போது நாவற்குடா நொச்சிமுனை 5 ஆம் குறுக்குத் தெரு வில் நீர்நிலையொன்றினுள் சூட்சுமமானமுறையில்மறைத்து வைத்திருந்த சட்ட விரோத கசிப்பு கொள்கலன்களை பொலிசார் மீட்டுள்ளதுடன் சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

காத்தான்குடிபொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சொல்லொன்று செயலொன்று வேண்டாம்

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய பேச்சில், உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. நாட்டில் நல்லிணக்கமோ தீர்வோ ஏற்படாத நிலையில் அத்தகைய ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவதற்கு இது பொருத்தமான காலமல்ல என்று பேச்சில் வலியுறுத்தப்பட்டது. அத்தகைய ஒரு ஆணைக்குழு உருவாக்கப்படுவதற்கு முன்னர் அது தொடர்பில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கருத்துக்கள் முழுமையாக அறியப்படவேண்டும் என்று எடுத்து விளக்கப்பட்டது. உள்ளூர் நீதி முறைமைகளில் தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்துவிட்ட நிலையில் சர்வதேச விசாரணை ஒன்றையே அவர்கள் கோரி நிற்கின்றார்கள் என்றும் இதுபோன்ற ஆணைக்குழுக்களுக்கு அவர்களின் ஆதரவு இருக்கப்போவதில்லை என்றும் விரிவாகக் கூறப்பட்டது.

இருப்பினும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை அமைப்பதற்கான பணிகள் எவையும் இது வரையில் நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. பதிலாக இந்த ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான சட்டவரைபைத் தயாரிக்க நியமிக்கப்பட்டுள்ள குழுவின் தலைவர் தொடர்பான சர்ச்சைகள் எழுந்துள்ளன. சர்வதேச பொருளியல் சட்டத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற வணிகத்துறைசார் சட்டத்தரணியான கலாநிதி அசங்க குணவன்ச அந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் எவ்வித பரிச்சயமும் இல்லாத அசங்க குணவன்ச, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான மிக முக்கியமான பூர்வாங்க நடவடிக்கைக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

அதுமாத்திரமன்றி, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உருவாக்கத்தின்போது அதனோடு இணைந்ததாக உருவாக்கப்படவுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க செயலகத்தின் செயலாளர் நாயகமாகவும் அசங்க குணவன்சவை நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு வருவதாக ஆட்சித் தரப்பிலிருந்து செய்திகள் கசிந்திருக்கின்றன. இது மேலும் விமர்சனங்களை உருவாக்கியுள்ளது.

தென்னாபிரிக்கா, பேரு மற்றும் சிலி போன்ற நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்களுக்குப் பொறுப்பாக சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் தேர்ச்சி பெற்றவர்களும் அப்பணிக்கு முழுமையாக நேரத்தை ஒதுக்கக்கூடியவர்களுமே நியமிக்கப்பட்டனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இவையெல்லாம் ஆணைக்குழு விடயத்தில் தமிழர்களின் கருத்துக்களுக்கு மாறான முடிவை நோக்கியே ஆட்சியாளர்கள் செல்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றன. இனி இதற்கெதிராகவும் தமிழ் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடித்தான் தமது கருத்துக்களை ஆணித்தரமாகத் தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது கவலைக்குரியது. இன்று நடக்க இருக்கும் அரசுத் தலைவருடனான பேச்சில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனை ஆணித்தரமாகச் சுட்டிக்காட்ட வேண்டும்.

பன்னாட்டு அரங்கில் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான பகடைக் காய்களாகத் தமிழர்களைப் பயன்படுத்துவதை நிறுத்தி இதயசுத்தியோடு, அர்ப்பணிப்போடு அரசுத் தலைவர் பேச்சை முன்னெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதோடு, அவர் அப்படி நடந்து கொள்வதை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

# சீனாவின் பொருளாதார அரசியல் செல்வாக்கால் இலங்கையில் பாரியளவில் ஆபத்துகள் ஏற்படலாம்

## பிரிட்டிஸ் அமைச்சர் கருத்து



இலங்கையில்சீனாவின் பொருளாதார மற்றும் அரசியல் செல்வாக்கால் ஆபத்துக்கள் ஏற்படலாம் என்பதை பிரிட்டன்ஏற்றுக்கொள்கின்றது என அந்த நாட்டின் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்

பிரிட்டனின் வெளியுறவு பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இராஜாங்க அமைச்சர் அன்ரூ மிட்செல் பொதுச்சபையில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனதுநண்பர்குறிப்பிட்ட கொவிட் பெருந்தொற்றின் தாக்கம் உக்ரைன் மீதான ரஸ்ய படையெடுப்பின் தாக்கம்ஆகியஅனைத்தும்இலங்கையின் பொருளாதாரத்துக்குக் கடும் சவாலை ஏற்படுத் தியுள்ளன என அன்று மிட்ச்செல் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக நிதியைத் தவறான முகாமை செய்தமை உட்பட கட்டமைப்பு பலவீனங்களால் மேற்சொன்னவற்றின் தாக்கங்கள் அதிகரித்துள் ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் மே மாதம் இலங்கை தனது கடன்களை செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலையை அடைந்தது கடும் பொருளா தார நெருக்கடிக்குள் சிக்குண்டது,பணவீக்கம் 73 வீதத்தால் அதிகரித்தது சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் போசாக்கான மலிவான உணவை பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர்,எரிபொருள் மருந்து அத்தியாவசியப்பொருள்களுக்குப்பற்றாக்குறைகாணப்பட்டது எனவும் பிரிட்டனின் அமைச்சர் அன்ரூமிட்ச்செல் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் சமீபத்தைய அறிக்கையின் படி அந்த வேளையில் ஒரு பன்முக பேரழிவைநாடுஎதிர்கொண்டிருந்தது,பின்னர் நிலைமை மேம்பட்டாலும் இன்னமும் பலர் வாழ்க்கைக்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் மேலும் பல இலங்கையர்கள் வாழ்க்கை தரம் மோசமான சரிவை சந்தித்துள்ளதுஎனவும்அன்ரூமிட்ச் செல் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிலைமைமோசமடைவதை உணர்ந்த பிரிட்டன், மோசமாகபாதிக்கப்பட்டவர்களிற்கு உதவுவதற்காக 3 பில்லியன் டொலர்களை வழங்கியது குறைந்த வருமானம் உழைக்கும் நாட்டிற்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவது வழமைக்கு மாறான விடயம் என்ற போதிலும் இந்த உதவி இலங்கை எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடியின் பாரதூர தன்மையையும் அவசர நிலையையும் வெளிப்படுத்தியதுடன் இரண்டு நாடுகளிற்கும் இடையிலான நெருக்கமான உறவுகளையும் வெளிப்படுத்தியுள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடிக்கான அடிப்படை காரணங்களுக்குத் தீர்வை காண்பதற்கும் கடன்பேண்தகு தன்மை பொருளாதார மீட்சி ஆகியவற்றினை உறுதி செய்வதற்கும் சர்வதேசசமூகங்களுடன் இணைந்து பிரிட்டன் செயற்படுகின்றது நாங்கள் சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கையின் பொருளாதார கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களிற்கு ஆதரவளிக்கும் நான்கு வருடங்களிற்கான 3000 மில்லியன் ஆதரவை வரவேற்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் ஆதரவளிப்போம்,இந்த பேச்சுகளில் ஆக்கபூர்வமாககலந்துகொள்ளுமாறு அனைத்து கடன் வழங்குநர்களையும் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் அன்ரூமிட்ச்செல் தெரிவித்துள்ளார்.

எனது நணபர் சீனா குறித்து கேள்விஎழுப்பினார் நான் இந்த கேள்விக்கு தெளிவாகப் பதில் அளிக்க விரும்புகின்றேன், மூன்றாம் உலகின் எந்த நாட்டிற்கும் உதவி வர்த்தகம் மற்றும் முதலீடு போன்ற விடயங்களில் சீனா ஒரு முக்கியமான நாடு - புதிய பட்டுப் பாதை திட்டம் உட்பட சீனா வின் முதலீடுகள் ஏனைய உட்கட்டமைப்பு முதலீடுகளுடன் சர்வதேச உட்கட்டமைப்பு இடைவெளியை நிரப்புவதற்கு உதவக்கூடும், எனத் தெரிவித்துள்ள பிரிட்டிஸ் அமைச்சர், ஆனால் கடன் பேண்தகுதன்மைசீனாவின் அரசியல் பொருளாதார செல்வாக்கு குறித்த விடயங்கள் தொடர்பாக நாங்கள் கவலை கொண்டுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

சீனாவிற்கான இலங்கையின் கடனின் தன்மை சிக்கலானது மற்றும் மாறுபட்டது,மேலும் கடன் விவகாரங்களிற்கு தீர்வை காண்பதற்கு கடந்த காலங்களில் சீனா உதவ தயங்கியமை கரிசனை அளிக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்

நான் தற்போது மனித உரிமை குறித்த முக்கிய கேள்வி தொடர்பாக எனது கவனத்தை செலுத்துகின்றேன், பிரிட்டனின் பொதுச் சபையின் சில உறுப்பினர்கள் சர்வதேச நாணயநிதியம் தனது நிதி உதவி தொடர்பில் நிபந்தனைகளை விதிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துவருகின்றனர்,ஆனால் சர்வதேச நாணயநிதியம் அரசியல் பொருளாதார விடயங்கள் தொடர்பில் நிபந்தனைகளை விதிக்க முடியாத நிலையில் உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமூகபாதுகாப்புவலைப் பாதுகாப்புகள் அனைத்து சமூகங்களிற்குமான போதுமான ஆதரவை வழங்குவதை உறுதிசெய்வதற்காக இலங்கையின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை நாங்கள் நெருக்கமாக அவதானிப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை தீர்மானம் உட்பட இலங்கையில் அனைத்து சமூகங்களுக்கும் மனித உரிமைகளை உறுதி செய்வதற்கான சர்வதேச சமூகம் தலைமையிலான முயற்சிகளில் பிரிட்டன் ஈடுபட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள அமைச்சர், இந்த முயற்சிகள் வெற்றியளிப்பதற்காக பாதிக் கப்பட்டவர்கள் உட்பட தொடர்புபட்ட அனைத்து பங்குதாரர்களுடனும் அரசாங்கம் கலந்தாலோசிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சர்வதேச நாணய நிதியத்தின் 90 சதவீத நிபந்தனைகளை நாமே நிறைவேற்றினோம்

## நீதியமைச்சர் விஜயதாஸ பெருமிதம்



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் நூற்றுக்கு தொண்ணூறு சதவீதமான நிபந்தனைகளைபூர்த்திசெய்வதற்குஅவசியமான நடவடிக்கைகள் நீதி அமைச்சாலேயே முன்னெடுக்கப்பட்டன. ஜனநாயகத்தைவலுப்படுத்துவதற்கு அவசியமான சட்டங்கள், தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான சட்டம், ஊழல் மோசடிகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சட்டங்களை நாமே தயாரித்தோம் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயற்பாடுகளை மக்களுக்கு பயனுள்ள வகையில் மேலும் வலுப்படுத்துவது குறித்த நீதியமைச்சின் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வொன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே நீதியமைச்சர் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் கூறுகையில் -

நாம் அனைவரும் ஒவ்வொரு மட்டத்திலிருந்து நாட்டு மக்களுக்கு சேவையாற்றி வருகிறோம். நாம் வகிக்கும் பதவியும், எமக்குரியபொறுப்புக்களும்வேறுபடலாம். இருப்பினும், எம் அனைவரினதும் இலக்கும் ஒன்றுதான்.

நாடு என்ற ரீதியில் நாம் அபிவிருத்தி அடைய வேண்டுமானால், முதலில் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்த வேண்டும். சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்படாததன் விளைவாக தங்கச் சுரங்கங்களைக் கொண்ட பல ஆபிரிக்க நாடுகளால் இன்னமும் அபிவிருத்தி அடைய முடியவில்லை. தற்போது நாமும் அந்நாடுகளை ஒத்த நிலையிலேயே இருக்கின்றோம்.

எமது நாட்டில் இல்லாத வளம் என்று எதனையும் கூறமுடியாது.எம்மிடம்உள்ள வளங்கள் இந்தியாவில் கூட இல்லை. இருப்பினும், நாம் இன்னமும் உரிய இடத்தை அடையவில்லை. ஜப்பான், கொரியா, தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகள் பொருளாதார ரீதியில் எம்மை விடவும் பின்னடைவான நிலையிலேயே இருந்தன. அந்நாடுகளின் தலா வருமானம் எமது நாட்டை விடக் குறைவான மட்டத்திலேயே காணப்பட்டன.

கல்வியறிவு வீதம், சிசு மரண வீதம், கர்ப்பிணித் தாய்மாரின் மரணவீதம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு நோக்குமிடத்து எமது நாடு முன்னேற்றகரமான மட்டத்தில் உள்ளது.

எது எவ்வாறிருப்பினும், பொருளாதார நெருக்கடியின் விளைவாக சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுதவிபெறவேண்டியநிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெறுவதென்பது ஏனைய நாடுகளுக்கு இலகுவான தொரு விடயமாக இருக்கவில்லை. இருப்பினும், இலங்கையைபொறுத்தமட்டில் நிதியமைச்சும் திறைசேறியும் மிகச் சரியாக செயற்பட்டு, இந்தக் கடனுதவிக்கான இணக்கப்பாட்டை எட்டியிருக்கின்றன என்ற எண்ணம் மக்கள் மத்தியில் நிலவுகின்றது. ஆனால், இவ்விடயத்தில் நீதியமைச்சு சரியாக செயற்பட்டிருக்காவிட்டால் இந்த இணக்கப்பாட்டைஎட்டுவதில் மேலும் ஒரு வருட காலதாமதம் ஏற்பட்டிருக்கும் என்ற விடயம் மக்களுக்குத் தெரியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் நூற்றுக்கு தொண்ணூறு சதவீதமான நிபந்தனைகளைபூர்த்திசெய்வதற்குஅவசியமான நடவடிக்கைகள் நீதியமைச்சாலேயே முன்னெடுக்கப்பட்டன.

அதேபோன்று எமது நாடு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இழந்திருந்த காலப்பகுதியில், அதனை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான நிபந்தனைகளில் நூற்றுக்கு அறுபது சதவீதமான நிபந்தனைகள் எமது அமைச்சாலேயே நிறைவேற்றப்பட்டன.

ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு அவசியமான சட்டங்கள், தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான சட்டம், ஊழல் மோசடிகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கான சட்டங்கள் எமது அமைச்சாலேயே தயாரிக்கப்பட்டன என்று சுட்டிக்காட்டினார்.

# லொறி ஒன்றிலிருந்து பணம் கிரானகமவில் கொள்ளை

## பொலிஸ் உத்தியோகத்தருக்கும் தொடர்பாம்

கிரானகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புதுகெஹின்னபகுதியில்லொறிஒன்றிலிருந்து பணம்கொள்ளையடிக்கப்பட்டசம்பவத்துடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கும் தொடர்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன என கிரானகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, சந்தேக நபரைக் கைது செய்வதற்கான பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என கிரானகம பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

எவ்வாறாயினும், இந்தச் சம்பவத்தின் பின்னர் சந்தேகத்துக்குரிய பொலிஸ் உத்தியோகத்தர் இதுவரை பணிக்கு சமுகமளிக்கவில்லை என கிரானகம பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்துக்குரிய பொலிஸ் உத்தியோகத்தர் சிலாபம் பொலிஸ்நிலையத்தில்கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தராவார்.

பல மாதங்களாக அவர் பணிக்கு சமுகமளிக்காத காரணத்தால் சந்தேக நபர் சேவையை விட்டு விலகியுள்ளார் எனக் கருதப்படுவதாகவும் கிரானகம பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் கூறினர்.

# வான் வீதியை விட்டு விலகி மரத்தில் மோதியதில் 8 மாணவிகள், 2 மாணவர்கள், ஆசிரியர் காயம்!




பதுளை-பண்டாரவளை பிரதான வீதியில் ஹாலி-எல பிரதேசத்தில் உள்ள தோவ ரஜமஹா ஆலய ஊர்வலத்தில் கலந்துகொண்ட நடனக் குழுவின் மாணவர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்று வீதியைவிட்டுவிலகிமரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் நடன ஆசிரியர் உட்பட பலர் காயமடைந்து பதுளை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

பதுளை பிரதேசத்தில் உள்ள கலை நிறுவனம் ஒன்றின் நடன ஆசிரியை மற்றும் மாணவர்கள் குழுவொன்றே விபத்தில் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் 8 மாணவிகளும் 2 மாணவர்களும் அடங்குகின்றனர் எனவும் அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் பதுளை பொது வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி டாக்டர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

# தபால் ரயிலால் மோதப்பட்டு இரு காட்டு யானைகள் கொழும்பு - திருகோணமலை பாதையில் இறப்பு



கொழும்பிலிருந்து திருகோணமலைநோக்கி பயணித்த இரவு தபால் ரயில், அக்போபுர மற்றும் கித்துல்உத்துவ ரயில் நிலையங்களுக்கு இடையில்இரண்டுயானைகளை மோதியுள்ளன என வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த இரண்டு காட்டு யானைகளும்உயிரிழந்த நிலையில் காணப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மற்றொரு காட்டு யானை காட்டுப் பகுதிக்கு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து காரணமாக ரயில்இரண்டுமணிநேரம் தாமதமாகவே மீண்டும் தனதுபயணத்தைதொடர்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# விளையாட்டின் மூலம் மாணவர்களை தவறான போக்கிலிருந்து மீட்கமுடியும்!

## கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் நஜீம் கருத்து

விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம் மாணவர்கள் கல்வியில் தோற்று விடுவார்கள் என்ற நம்பிக்கை பிழையானது. விளையாட்டு மாணவர்களுக்கு உடல், உள ஆரோக்கியத்தை வழங்குவதுடன் நம்பிக்கையையும் மாணவர்கள் மத்தியில் வளர்க்கிறது. விளையாட்டிலும், கல்வியிலும் சம அளவில் சாதித்த எத்தனையோ பேர் இன்றும் எம்மத்தியில் இருக்கிறார்கள் என கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தெரிவித்தார்.

கல்முனைகோட்டமட்டபாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகள் கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்டக்கல்விப் பணிப்பாளருமான ஏ.பி.பாத்திமா நஸ்மியா சனூஸ் தலைமையில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் கடந்த மூன்று நாள்களாக நடைபெற்று இறுதி நாள் நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை கோலாகலமாக நடைபெற்றன. வைபவரீதியாக இடம்பெற்ற இறுதி நாள் நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் –

விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம் மாணவர்கள் போதைப் பாவனையில் ஈடுபடுவதிலிருந்துதவிர்ந்துகொள்கிறார்கள். மாணவர்கள் மத்தியில் விளையாட்டு பல படிப்பினைகளையும், பல வாழ்க்கைத் தத்துவங்களையும் எடுத்தியம்புகிறது. விளையாட்டில்ஈடுபட்டால்கல்வியில்கவனம் செலுத்த முடியாது என்பது பிழையான கூற்றாகவே இருக்கிறது. எமது நாட்டின் பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபடும் பல வீரர்களும் கல்வியிலும் தங்களை சிறந்தவர்களாக நிரூபித்திருக்கிறார்கள்.

இஸ்லாம் அனுமதித்த வகையில் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு பெண் மாணவிகளும் விளையாட்டில் ஈடுபட வேண்டும். இந்தப் போட்டியில் கலந்துகொண்ட பல்வேறு வீரர்களை நான் சாதனையாளர்களாகப் பார்க்கிறேன். இந்த வீரர்கள் மாகாண மட்டத்தில், தேசிய மட்டத்தில் சாதிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

கல்முனை இம்முறை வரலாற்று சாதனைகளை படைக்க எனது பிரார்த்தனைகளும், வாழ்த்துக்களும்.

ஒரு பெண்ணாக இருந்து இந்த கோட்டத்தை சிறப்பாக வழி நடத்தி இந்த விளையாட்டு போட்டிகளை கோலாகலமாக நடத்திய கோட்டக்கல்வி அதிகாரி நஸ்மியா சனூஸ் தன்னை திறமைசாலியாக நிரூபித்துள்ளார். கல்முனை வலயம் கல்வியில் மாத்திரமல்ல ஏனைய விடயங்களிலும்சாதனையாளர்களாககடந்த காலங்களில் தங்களை நிரூபித்துள்ளனர். இந்த வரலாறு தொடரும். – என்றார்.






# வவுனியாவில் சீனிப்பாணியைக் காய்ச்சி தேன் என விற்பனை செய்தவர் கைது!

## 263 போத்தல்கள் மீட்பு





வவுனியாவில் சீனிப்பாணியை காய்ச்சி தேன் என விற்பனை செய்த நபர் சனிக்கிழமை காலை கைதுசெய்யப்பட்டதோடு, அவரிடமிருந்து சீனிப்பாணி நிரப்பப்பட்ட 263 போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தேன் என சீனிப்பாணியை விற்பனை செய்வதாக வவுனியா சுகாதாரப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், பொது சுகாதார பரிசோதகர்கள் வனிக்கிழமை காலை வேப்பங்குளம் 8ஆம் ஒழுங்கை, ஊர்மிளா கோட்டம் பகுதியில் உள்ள வீடொன்றினை சுற்றிவளைத்துள்ளனர்.

அதனையடுத்து, குறித்த நபர் கைதுசெய்யப்பட்டதோடு, அந்த வீட்டில் விற்பனைக்குதயாரானநிலையில்இருந்த 263 போத்தல்களில் அடைக்கப்பட்ட சீனிப்பாணி (750 மில்லிலீற்றர்) மற்றும் சீனிப்பாணி தயாரிக்க பயன்படுத்தப்பட்ட சில பொருளகளை சுகாதாரப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில், சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட சீனிப்பாணி போத்தல்கள் உள்ளிட்ட பொருள்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, சந்தேக நபர் ஒரு லட்சம் ரூபா சரீர பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# ரொத்தஸ் கொலனி மக்களுக்கு குடிதண்ணீர் பெற நடவடிக்கை

ஹற்றன், ரொத்தஸ் கொலனியில் வாழும் மக்களுக்கு குடிநீரை பெற்றுக் கொடுப்பதற்கான ஆரம்பக்கட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமையவும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரனின் வழிகாட்டலின் கீழ் குறித்த பகுதிக்கு குழுவொன்று அண்மையில் நேரில் பயணம் மேற்கொண்டது.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் இணைப்பு செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ் தலைமையிலான இந்த குழுவில் நுவரெலியா பிராந்தியத்தின் சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் அதிகாரி உட்பட பலர் இடம்பெற்றிருந்தனர்.

குடிநீர் திட்டத்தை முன்னெடுப்பதற்கான உரிய இடம் அடையாளம் காணப்பட்டது, இடத்துக்குரிய ஒதுக்கீட்டு அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர் அடுத்தக்கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும். தோட்ட மக்களுடனும் அமைச்சின் பிரதிநிதிகள் கலந்துரையாடி கருத்துகளைப் கேட்டறிந்துகொண்டனர்.

ரொத்தஸ் கொலனியில் வாழும் சுமார் 600 குடும்பங்கள், தமக்கு சுத்தமான குடிநீரை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.


Malaysia Tour
5 DAYS 4 NIGHTS
SOLD OUT
Next Tour
June 30
INCLUSION
» 04 Night stay in Kuala Lumpur
» Daily breakfast at hotel
» Return AirTicket
» Getting Highland tour with cable car
» City tour on arrival day
» Evening tour to twin tower
» Batu caves temple visit
» Putrajaya city tour
LKR 148,000.00
For Early Booking
Travel Date: 19 - 23 May 2023
Semba
Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 31 ஞாயிற்றுக்கிழமை 14.05.2023 கதிர் 58

## ஆளுநர்கள் பதவி விலக மறுத்தால் அரசியல் நெருக்கடிகள் தோன்றும்

### சட்டத்தரணி லால் விஜேநாயக்க

ஜனாதிபதியின் உத்தரவினை ஏற்று ஆளுநர்கள் பதவிவிலகவில்லைஎன்றால் மீண்டும்அரசியல்நெருக்கடி ஏற்படுமெனசட்டத்தரணிலால் விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆளுநர்கள் நால்வரைப் பதவி விலகுமாறு கோரியபோதும் அவர்கள் பதவி வலிக முடியாதென்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளமை தொடர்பில் கருந்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2

## நியமனத்துக்குக் காத்திருக்கும் புதிய ஆளுநர்களின் விவரம்

ஆளுநர் பதவியில் இருந்து விலகுமாறு நான்கு மாகாண ஆளுநர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க அவர்கள் பதவி விலகினால் அவர்களின் இடத்துக்கு புதிதாக நியமிக்கப்படவுள்ளவர்கள் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளது.

கொழும்பிலிருந்துவெளியாகும் சிங்கள வார இதழ் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

வடமேல்மாகாணத்துக்கு லக்ஸ்மன் யாப்பா அபேவர்தனவும், சப்ரகமுவ மாகாணத்துக்கு ரங்கே பண்டார அல்லது நவீன்திசாநாயக்கவும், கிழக்கு மாகாணத்துக்கு செந்தில் தொண்டமானும், வடமாகாணத்துக்கு பி.எஸ்.எம்.சார்ள்ஸும் நியமிக்கப்படவுள்ளனர் என்று அந்தப் பத்திரிகை தெரிவிக்கின்றது.

பதவி விலகுமாறு அறிவித்துள்ள பணிக்கப்பட்டுள்ள வசந்த கரன்னகொட, டிக்கிரி கொப்பேகடுவ, அனுராதா யஹம்பத் மற்றும் ஜீவன் தியாகராஜா ஆகிய நால்வரும் பதவி விலகினால் மட்டுமே புதியவர்களை நியமிக்க முடியும் என்ற இக்கட்டு நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, கிழக்கு மாகாண ஆளுநரான அநுராதா யஹம்லத்தை நீக்கக் கூடாது என்று சர்வமதத் தலைவர்கள் மற்றும் பொது ஜனபெரமுனவினர் அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

முன்னதாக, பொதுஜன பெரமுனவுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஐந்து ஆளுநர்களை பொதுஜனபெரமுனவும், நான்கு ஆளுநர்களை ஜனாதிபதி தரப்பிலும் நியமிப்பதென்று இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

## புத்தர் சிலை வைக்கும் விவகாரம்:

# தடைகளையும் மீறி திருமலையில் இன்று பிக்குகள் அடாவடித்தனம்

### படையினரின் பாதுகாப்பைப் புறக்கணித்து நுழைந்தனர்



திருமலை நகரில் வழிபாட்டில் ஈடுபடும் பிக்குகள்



திருமலைக்கு வந்திறங்கிய தாய்லாந்து பிக்குகள்



தாய்லாந்து பிக்குகள்

ஜனாதிபதியின் உத்தரவையும் மீறி திருகோணமலை நெல்சன் திரை அரங்கிற்கு முன்பாக புத்த பிக்குகள் சிங்கள மக்கள் பலரையும் சேர்த்துக் கொண்டு சமய நிகழ்வுகளை அடாத்தாக நிகழ்த்தினர்.

இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. இனப் பதற்றம் ஏற்படாமல் அந்த இடத்தில் பொலிஸார் மற்றும் படையினர் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தபோதும் பிக்குகள் அதனைப் பொருட்படுத்தாமல் அந்த இடத்தில் நிகழ்வை நடத்தினர்.

## இலங்கை இந்தியா இடையே

## கடல் வழி மின், எரிபொருள் பரிமாற்றத்துக்கு இணக்கம்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே மின்சாரம் மற்றும் எரிபொருளை நேரடியாகப் பரிமாறுவதற்கான குழாய்களை அமைப்பதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

கேபிள் மூலம் மின்சாரத்தையும் குழாய் வழியாக எரிபொருட்களையும் பரிமாறுவதற்குக் கொள்கை அளவில் இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து வெளியாகும் சிங்கள நாளேடு ஒன்று இச் செய்தியை வெளியிட்டுள்ளது. குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மின்சாரத்தை கடத்துவதற்குப் பயன்படுத்தப்படும் சிறப்பு மின் கேபிளை அமைப்பதற்கு இந்திய-இலங்கை அதிகாரிகள் கொள்கை அளவில் இணக்கத்திற்கு வந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள கடற்பரப்பில் இந்திய-இலங்கை எல்லைகளை பிரிக்கும் மணற்பரப்பின் ஊடாக இந்த மின்சாரக் கேபிளை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தவிர, திருகோணமலையில் அமைக்கப்பட்டுள்ள எண்ணெய்க் குதங்கள் அமைந்துள்ள பகுதிக்கு எரிபொருளை வழங்குவதற்காக, இந்தியாவில் இருந்து திருகோணமலைக்கு நிலத்தடிவழியாகஎரிபொருள்குழாய் அமைக்கவும் இரு நாட்டு அரசுகளும் திட்டமிட்டுள்ளன.

மின்சாரக்கேபிள்அமைக்க சுமார் 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்றுதற்போதைய முதற்கட்ட கணக்கீடுகளில் தெரிய-வந்துள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டை கட்டியெழுப்பிவிட்டு பின்னர் அரசியல் செயலாமாம்

நாட்டைக் கட்டியெழுப்பிவிட்டு பின்னர் அரசியல் செய்யலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், வைத்தியருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

களுத்துறையில் நடைபெற்ற நிகழ்வில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு மிக மோசமான வங்குரோத்து நிலைமைக்குச் சென்றுள்ளது. இவ்வாறு சென்ற நாட்டை முன்னோக்கி கட்டியெழுப்ப வேண்டிய தேவை அனைவருக்கும் உள்ளது. அது அனைவரினது கடமையும் ஆகும்.

சர்வதேசத்தில் கிரீஸ், ஆர்ஜன்டீனா, லெபனான் போன்றநாடுகள்வங்குரோத்து நிலைமைக்குச்

2

## நாணய நிதிய அதிகாரிகளுடன் தொழிற்சங்க பிரதிநிதிகள் பேச்சு

இலங்கைக்குப் பயணம் செய்துள்ள சர்வதேச நாயண நிதியத்தின் அதிகாரிகளை, தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்கக்கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

கொழும்பில் நேற்றைய தினம் சர்வதேச நாணய நிறுவனத்தின் ஆசிய-பசுபிக்பிராந்தியத்தின் பணிப்பாளர் கிர்ஷ்ணா ஸ்ரீனிவாசன் தலைமையிலான குழுவினருடன் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, தொழில்வல்லுநர்களின்தொழிற்சங்கக் கூட்டமைப்பினால் கோரிக்கைகள் அடங்கிய ஆவணமும்கையளிக்கப்பட்டது.

இச்சந்திப்பு தொடர்பில், தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்கக்கூட்டமைப்பின் பிரதிநிதிகளில் ஒருவரான கலாநிதி அநுராந்த ஆராய்ச்சி தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடனான சந்திப்பு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. சுமூகமாக நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது 400மடங்கால் ஏற்பட்டுள்ள வரி அதிகரிப்பு தொடர்பில் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்றோம்.

அவ்விடயங்களைவிரிவாகக் கேட்டுக்கொண்டவர்கள் தமது அதிருப்தியையும் வெளிப்படுத்தினார்கள்.

2

### கிளிநொச்சி ஊடாக

## யாழ்ப்பாணம் வருகிறது முள்ளிவாய்க்கால் ஊர்தி

(சண்முகம் தவசீலன்)



முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தையும், தமிழ் இனப் படுகொலையையும் நினைவூட்டும் வகையிலான முல்லைத்தீவில் இருந்து நேற்றுப் புறப்பட்ட ஊர்தி இன்று மல்லாவியில் இருந்து தனது மூன்றாவது நாள் பயணத்தைத் தொடர்ந்தது.

மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர்.

முல்லைத்தீவுக் கரையோரமிருந்து வெள்ளிக்கிழமை காலை தனது பயணத்தைத் தொடங்கியது இந்த ஊர்தி. ஞாயிற்றுக் கிழமை காலை வவனியாவில் இருந்து புறப்பட்ட ஊர்தி மன்னார் சென்று வெள்ளாங்குளம் ஊடாக மல்லாவி நகரை அடைந்தது.

2

## மூன்றாவது நாளாகவும் முள்ளவாய்க்கால் கஞ்சி

(ந.குகதர்சன்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் மூன்றாம் நாளான இன்றும் வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வு இடம்பெற்றது.

இன்றைய தினம் தமிழர் தாயக மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கிரான் சந்தியில் கஞ்சி தயாரிக்கப்பட்டு பரிமாரப்பட்டது.

அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சமூக செயற்பாட்டாளர் வி.லவக்குமார் தலைமையில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது. யாழ்ப்பாணத்திலும் ஆங்காங்கே பல இடங்களிலும் கஞ்சி வழங்கப்பட்டது.



### பெரமுனவும் கைவிட்டுவிட்டது

## ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் யார் ரணிலை ஆதரிப்பார்கள்?

### ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி



ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் ரணில்விக்கிரமசிங்கவை ஆதரிக்கப்போவதுயார்? பொது ஜன பெரமு-னவும் அவரை ஆதரிக்கப்போவதில்லை என்று தெரிவித்துவிட்ட பின்னர்யாரைநம்பிஅவர் தேர்தலில்களமிறங்குவார் என்று ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி.லால் காந்த கேள்வி எழுப்பினார்.

நிகழ்வொன்றின்பின்னர் கருத்து வெளியிம்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார், அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளுநர் பதவிகளில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் நியமித்தவர்கள் தான் உள்ளனர்.

இந்தநிலையில்தற்போது நாட்டைமீட்பதற்குவந்திருக்கிறார் என்று கூறப்படும் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கஆளுநர்களைப் பதவி விலகுமாறு கோருகின்றார். சமகாலத்தில் பொது ஜன பெரமுன ஆளுநர்கள் யாரும் பதவி விலகக் கூடாது என்று ஏகோபித்து கட்சித் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

இதனால்தற்போதுஜனாதிபதி பதவியில் அமர்ந்து கொண்டு ரணில் விக்கிரமசிங்க உருவாக்கிவரும் அதிகாரத்திற்கும், பொது ஜன பெரமுனவின் பெரும்பான்மை அதிகாரத்திற்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி தேர்தலையே நடத்துவதற்கு ஆர்வமாக உள்ளார்.

அவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரமுனவின் ஆதரவு அவசியமாகின்றது. எனினும், பொது ஜன பெரமுன ஆளுநர் விடயம் உள்ளிட்ட பல விவகாரங்களில் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதில்லை என்பதை வெளிப்படுத்தியாகிவிட்டது.

அவ்வாறான நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்லும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கப்போவது யார் என்ற கேள்வி இங்கு எழுகின்றது. ஏனென்றால் ஐக்கியமக்கள்சக்திரணிலுக்கு ஆதரவளிக்கப்போவதில்லை என்பது தெளிவு. எமது தரப்பிலிருந்து வேட்பாளர் நிறுத்தப்படுவார்.

அப்படியென்றால்ஜனாதிபதி தேர்தலுக்குச் செல்வதற்கு அவசப்பட்டுக்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கப் போவது யார். சர்வதேச நாணய நிதியம் ரணிலை ஜனாதிபதி தேர்தலிலும் வெற்றிபெறுவதற்கு அனுமதிக்குமா என்ற கேள்விகள் உள்ளன - என்றார்.

# தகுதியானவர்களுக்கு மாத்திரமே இனி அரச நலன்புரி கொடுப்பனவு!

## நிதி இராஜாங்க அமைச்சர்



நடுத்தர மக்களுக்கு வழங்கும் நலன்புரி கொடுப்பனவுகளை நடைமுறைக்கு சாத்தியமான வகையில் அதிகரிக்குமாறு சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

நலன்புரிகொடுப்பனவுகள்வெளிப்படை தன்மையுடன், தகுதி வாய்ந்த தரப்பினரை இலக்காக கொண்டதாக அமைய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது. இதற்கமைய எதிர்வரும் மாதம் முதல் 22 இலட்ச பேருக்கு (குடும்பங்கள்) நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்ற அஷ்வசும் நலன்புரி கொடுப்பனவு திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

அரசாங்கத்தினால் வழங்கப்படும் நலன்புரி கொடுப்பனவுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி நிலை காணப்படுகிறது. நிவாரணம் பெற தகுதியுள்ளவர்கள் அரசியல் காரணிகளுக்கு அமைய நீக்கப்படுவதும், தகுதியற்றவர்களுக்கு அரசியல் காரணிகளுக்கு அமைய நிவாரண கொடுப்பனவு வழங்கப்படுவதும் சர்வதேச மட்டத்தில் பிரதான குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டது.

நாட்டு மக்களின் வரிப்பணம் முறையற்ற தரப்பினருக்கு அரச நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படுவது சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை யின் போது பிரதான விடயமாக சுட்டிக்காட்டப்பட்டது. ஆகவே அரச நலன்புரி கொடுப்பனவுகளின் இனி வெளிப்படைதன்மையும்,உண்மைதன்மையையும் பேணுவதற்கு அரசாங்கம் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

2002 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க நலன்புரி கொடுப்பனவு தொடர்பான சட்டம் காலத்துக்கு ஏற்ப திருத்தியமைக்கப்படவில்லை. இதற்கமைய இந்த சட்டத்தை திருத்த அரசாங்கம் கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்ப கட்ட நடவடிக்கை முன்னெடுத்தது. ஆறு பிரதான விடயங்களை முன்னிலைப்படுத்தி குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் தீர்மானித்தது.

அரசாங்கம் முன்வைத்த 22 காரணிகளை உள்ளடக்கிய வகையில் நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள விண்ணப்பம் கோரப்பட்டது. பல்வேறு தரப்பினரிடமிருந்து போதுமான விண்ணப்பம் கிடைக்காத காரணத்தினால் மூன்று தடவைகள் விண்ணப்பம் செய்வதற்கான காலவகாசம் நீடிக்கப்பட்டது. இதற்கமைய சுமார் 37 இலட்சம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

37 இலட்ச விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் மற்றும் அரசாங்கம் கோரிய 22 காரணிகள் தொடர்பில் பிரதேச செயலாளர் பிரிவுகள் ஊடாக ஆராயப்பட்டன. இதற்கமைய 37 இலட்ச விண்ணப்பங்களில் 33 இலட்ச விண்ணப்பங்கள் மீள்பரிசீலனை செய்யப்பட்டன. முழுமையான தரப்படுத்தலுக்கு அமைய 22 இலட்சம் பேருக்கு (குடும்பங்கள்) நலன்புரி கொடுப்பனவு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குடும்ப மற்றும் தனி நபர் என்ற அடிப்படையில் இவ்வாறு நலன்புரி கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.நிலைமாறக்கூடிய தன்மையில் உள்ள நான்கு இலட்ச குடும்பங்களுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை 2500 ரூபா,அவதான தரப்பில் உள்ள 4 இலட்ச குடும்பங்களுக்கு எதிர்வரும் 2024.03 மாதம் வரை 5000 ரூபா, ஏழ்மை நிலையில் உள்ள 8 இலட்சம் குடும்பங்களுக்கு மூன்று வருட காலங்களுக்கு 8500 ரூபா, மிக ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு 15,000 ரூபா என்ற அடிப்படையில் நிவாரண கொடுப்பனவு வழங்கப்படும்.

அத்துடன் தனிநபர் என்ற அடிப்படையில் மாற்றுத்திறனாளிகள்,நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதம் 5000 ரூபா,வயோதிபர்களுக்கு மாதம் 2000 ரூபா என்ற அடிப்படையில் எதிர்வரும் இரு மாதத்துக்குள் நிவாரண கொடுப்பனவு வழங்கப்படும்.

குடும்ப நிலை,மாத வருமானம் மற்றும் வாழ்க்கை செலவுகள் தொடர்பில் புள்ளிவிபரவியல் திணைக்களம் கடந்த 2019 ஆம் ஆண்டு நியமைச்சிடம் சமர்ப்பித்த மதிப்பீட்டு அறிக்கை,2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் காணப்பட்ட பணவீக்கம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு நிவாரண கொடுப்பனவு தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

புதிய தரப்படுத்தலுக்கு அமைய தகுதி உள்ளவர்கள் நிவாரண கொடுப்பனவு தொகையை பெற்றுக்கொள்வதில் இருந்து நீக்கப்பட்டிருந்தால் அவர்கள் பிரதேச செயலாளர் ஊடாக மேன்முறையீடு செய்யலாம் அத்துடன் தகுதியற்றவருக்கு நலன்புரி கொடுப்பனவு வழங்கப்படுமாயின் அவர்கள் தொடர்பில் பிரதேச செயலாளர் பிரிவில் முறைப்பாடு செய்யலாம்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் நடுத்தர மக்களுக்கு வழங்கும் நலன்புரி கொடுப்பனவுகளை நடைமுறைக்கு சாத்தியமான வகையில் அதிகரிக்குமாறு சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியுள்ளது. வழங்கப்படும் நலன்புரி கொடுப்பனவுகள் வெளிப்படை தன்மையுடன்,தகுதி வாய்ந்த தரப்பினருக்கு மாத்திரம் வழங்கப்பட வேண்டும் என கட்டாயமாக வலியுறுத்தியுள்ளது. ஆகவே இனி தகுதி உள்ள தரப்பினருக்கு மாத்திரமே நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றார்.

# பதவிகளுக்காக விலைபோபவர்களை வடக்குக்கு ஆளுநராக்க வேண்டாம்!

## மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கோரிக்கை




ஜனநாயகத் தேர்தலை நிறுத்தி பதவிகளுக்காக விலை போனவர்களை வட மாகாண ஆளுநராக்க வேண்டாம் எனஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வன்னியசிங்கம் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு மாகாணத்தின் ஆளுநர் பதவி என்பது ஒரு ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு உட்பட்ட பதவிக்கு சமனானது.

ஆளுநர்களை நியமிப்பது மாற்றுவது ஜனாதிபதியின் அதிகாரமாக காணப்படுகின்ற நிலையில் முறைகேடுகள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாதவர்களை ஜனாதிபதி ஆளுநர்களாக நியமிக்க வேண்டும்.

வடக்கில் ஆளுநர் மாற்றம் இடம்பெறப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் கடந்த காலங்களில் நிர்வாக முறைகேடுகளில் சிக்கிய ஒருவர் ஆளுநராக வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த நபர் நாட்டின் ஜனநாயகத்துக்கு அடிப்படையாக விளங்குகின்ற தேர்தலை தடுப்பதற்காக திடீர் பதவி விலகலை செய்து தேர்தலை பிற்போடுவதற்கு பிரதான காரணமாக அமைந்தவர்.

மக்களின் ஜனநாயக உரிமையை வெளிப்படுத்தும் தேர்தலுக்கு மதிப்பளிக்காமல் சுகபோகங்களுக்காக விலைபோகிறவர்கள் எவ்வாறு மக்கள் பணி செய்வார்கள்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடமாகாண மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுடன் வாழ்ந்து வரும் நிலையில் அவர்களுக்கான தேவைகள் நிர்வாக ரீதியான உதவிகளை சலுகைகளுக்கு விலைபோகாத ஆளுநரால் மட்டுமே செய்யமுடியும்.

ஆகவே ஆளுநர்களை மாற்றும் போது மக்களுக்காக சேவை செய்யக்கூடிய ஊழல் முறைகேடுகளுடன் தொடர்பு அற்றவர்களை ஆளுநராக மாகாணங்களுக்கு நியமிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# மக்கள் புறக்கணித்த அரசியல்வாதிகளை பிரபல்யப்படுத்தவா சமுர்த்தி கொடுப்பனவு?

## ஹரினி அமரசூரிய கேள்வி



மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகள் மீண்டும் மக்கள் மத்தியில் செல்வதற்கான பாதையாக சமுர்த்தி போன்ற நலன்புரி வேலைத்திட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா? என்ற சந்தேகம் காணப்படுகிறது.

நலன்புரி கொடுப்பனவு திட்டங்களில் தலையிட அரசியல்வாதிகளுக்கு இடமளிக்க கூடாது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்ற அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுதிட்டம்தொடர்பானவிவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

சமூகபாதுகாப்புதொடர்பானவிடயத்துடன் நலன்புரி விடயங்கள் தொடர்புபடுகின்றன. தற்போது சமூக பாதுகாப்புக்கான கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட விடயங்கள் வீழ்ச்சியடைந்து செல்லும் போது அது தொடர்பில் பரந்துபட்ட வேலைத்திட்டங்கள் அவசியமாகவுள்ளது.

தற்போது இவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும்போது அரசியல்மயப்படுத்தி செய்வது தொடர்பாக விமர்சனங்கள் உள்ளன. இதனால் அரசியல் இன்றி அதனை முன்னெடுக்க வேண்டும்.

தகவல் சேகரிக்கும் போது பொய்யான தகவல்களை வழங்குவதால்தான் இதனை முறையாக முன்னெடுக்க முடியாதுள்ளது என்று குறிப்பிடப்படுகிறது. இதில் அரசியல்வாதிகள் தொடர்படுவதால் நலன்புரி அரசியலாகுகிறது. இதனால் அரசியல்வாதிகளை இதில் தொடர்புபடுவதை தடுக்க எடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகளுக்கு மீண்டும் கிராமங்களுக்கு செல்வதற்கான பாதையாக சமுர்த்தி போன்ற நலன்புரி வேலைத்திட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்ற சந்தேககங்கள் நிலவுகின்றன. தற்போது வறுமை நிலைமை அதிகரித்துள்ளது. இவ்வாறானவர்களின் எண்ணிக்கையை விடவும் குறைந்தளவானவர்களுக்கே இந்த உதவிகள் கிடைக்கவுள்ளன.

நலன்புரிகொடுப்பனவுதிட்டத்தில் இரண்டு இலட்சம் பேரின் தகவல்கள் காணாமல் போயுள்ளதாகவும் கூறப்படுகின்றது. வறுமையானவர்களுக்கும் தமது தனிப்பட்ட தகவல்களை மறைக்கும் உரிமை உள்ளது. அவர்களிடம் இவ்வாறு தகவல்களை சேகரிக்கும் போது அதனை பாதுகாத்து எவ்வாறு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடியும் என்றும் ஆராய வேண்டும் என்றார்.

# சட்டவிரோத மதுபானத்துடன் இருவர் யாழ்ப்பாணத்தில் கைது

யாழ்ப்பாணம்-மானிப்பாய்ஆனைக்கோட்டை பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது அவர்களிடம் இருந்து 6.5 லீட்டர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் நாம் வினவியபோது அது அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாக கூறினார்கள். இதேநேரம், தொழில்வாண்மையாளர்கள் முகங்கொடுக்கும் வரி அதிகரிப்பு தொடர்பிலும் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது – என்றார்.

## ஆளுநர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருவருக்கு ஆளுநர்களை நியமிக்கும் அதிகாரம் அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக நாட்டின் அடிப்படைச் சட்டத்தின் பிரகாரம், ஜனாதிபதிக்கு நியமிக்கும் அதிகாரம் காணப்பட்டால் அவருக்கு இயல்பாகவே நீக்கும் அதிகாரத்தையும் அது வழங்குகின்றது.

இதுவொரு சம்பிரதாய பூர்வமான விடயமாகும். அதுபற்றி அரசமைப்பில் தனித்துக் கூறப்பட வேண்டிய அவசியமில்லை. ஆகவே ஜனாதிபதியால் ஆளுநர்களை நீக்க முடியும். ஆனால், ஆளுநர்கள் பதவி விலக மறுத்தால் ஜனாதிபதிக்கும், ஆளுநர்களுக்கும் முரண்பாடான நிலைமைகள்தான் தோற்றம் பெறும். இது அரசியல் நெருக்கடிகளை உருவாக்கிவிடும் – என்றார்.

## நாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றன. அதற்கு சர்வதேசத்தின் உதவி கள்

கிடைக்கப்பெற்றாலும் இன்னமும் மீண்டெழ முடியாத நிலைமையே உள்ளது.

பாகிஸ்தானிலும் நிலைமைகள் மோசமடைந்துள்ளன. அந்நாட்டு ஆட்சியாளர்கள் சர்வதேச நாணய நிதியத்தினை நாடியபோதும் அவர்களுடன் பணியாற்ற முடியாத நிலைமையில் சர்வதேச நாயண நிதியம் உள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கையையும் அவ்வான நிலைமைக்குள் தள்ளிவிட முடியாது. நாட்டை மீண்டும் கட்டியமுப்பிய பின்னர் தேவை யானவர்கள் தமக்குரிய வகை யில் அரசியலைச் செய்ய லாம். அதற்கு முன்னதாக சில விடயங்கள் நடைபெறு கின்றன என்பதை ஏற்றுக் கொண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எதிர்மறையான மனோ நிலையில் இருந்துகொண்டு செயற்பாடுகளை முன்னெடுக் கும் தலைமையை விமர்சிப்பதால் பயனில்லை. நபருக்கு அப்பால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் சரியாகவும், முறையாகவும் இடம்பெற்றால் அதனை நாம் வரவேற்க வேண்டும். ஒத்துழைப்புத் தரவேண்டும் – என்றார்.

## தடைகளையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த இடத்தில் எந்தவித நிகழ்வுகளும் நடைபெறாது என்றும் தாய்லாந்துப் பிக்குகள் அந்த இடத்திற்கு வராமலேயே திருமலையிலிருந்து பாதயாத்திரை புறப்படுவார்கள் என்றும் மாவட்டச் செயலர் நேற்று அறிவித்திருந்தபோதும் இன்றைய தினம் பிக்குகள் அடாவடியாக அந்த இடத்திற்குள் புகுந்து சமய நிகழ்வுகளை நடத்தியிருந்தனர். திருகோணமலை நெல்சன் திரையரங்கிற்கு முன்னால் தாய்லாந்து பௌத்த தேரர்களின் உபசம்பதா நிகழ்வு இன்று நடப்பதாக இருந்தது. அதையொட்டி



நெல்சன் திரையரங்குக்கு முன்பாக உள்ள வில்லூன்றி கந்தசுவாமி கோயிலுக்குச் சொந்தமான இடத்திலேயே இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தாய்லாந்தில் இருந்து வருகை தந்த பிக்கு ஒருவர் இந்த இடத்தில்தான் வந்திறங்கினார் என்று மகாவம்சம் கூறுவதாக தொல்பொருள் திணைக்களம் அடையாளப்படுத்தியிருந்தது.

இதையடுத்து தாய்லாந்தில் இருந்து வருகை தந்த 40 பிக்குகள் இந்த இடத்திற்கு வந்து, தமது மூதாதையரின் வருகை ஞாபகார்த்தமாக நான்கடி புத்தர் சிலை ஒன்றை இந்த இடத்தில் வைப்பதற்கும், அதையொட்டிய சமய நிகழ்வுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தொடர்ந்து அங்கிருந்து கண்டிக்குப் பாதயாத்திரை செல்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது.

இது பதற்றத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தன் ஜனாதிபதியுடன் நேற்றுத் தொடர்புகொண்டு இது குறித்து முறையிட்டார். அதையடுத்து திருகோணமலையில் இனப் பதற்றம் உருவாகும் வகையிலான எந்தவொரு நடவடிக்கைக்கும் எந்தவொரு நபருக்கும் இடமளிக்கவேண்டாம் என்று ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

இந்த உத்தரவு ஜனாதிபதியின் செயலாளர் ஊடாக திருகோணமலை மாவட்டச் செயலருக்கு அறிவிக்கப்பட்டு அவர் ஊடாக நிகழ்வுக்கான அனுமதி மறுக்கப்பட்டது. நிகழ்வு நடக்க இருந்த இடத்தில் பொலிஸார் மற்றும் படையினரின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும் இன்று காலை சில பௌத்த தேரர்கள் சிங்கள மக்கள் பலரைத் திரட்டி வந்து நகரின் மத்தியில் உள்ள திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்தின் முன்பாகச் சமய நிகழ்வுகளில் ஈடுபட்டனர். வீதியிலேயே இந்த நிகழ்வு இடம்பெற்றது. பின்னர் அங்கிருந்து புறப்பட்டு நெல்சன் திரையரங்கப் பகுதிக்குச் சென்ற அவர்கள், படையினரின் பாதுகாப்புகளை மீறி அந்தப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து சமய நிகழ்வையும் நடத்தினர்.

இவ்வாறு மாவட்ட அரச அதிபர் மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சில பௌத்த தேரர்களினாலும் சிங்கள மக்களாலும் திருகோணமலையில் மணிக்கூட்டு கோபுரத்தில் இருந்து சமய நிகழ்வுடன் ஆரம்பிக்கப்பட்டு குறித்த தடைவிதித்த பகுதிக்குள் முப்படையினரின் பாதுகாப்பையும் மீறி வலுக்கட்டாயமாக நுழைந்து தமது சமய நிகழ்வுகளை முன்னெடுத்திருந்தனர்.

அத்துமீறும் அவர்களைத் தடுத்து நிறுத்த படையினர் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. நிகழ்வு நடந்துகொண்டிருந்தபோது, அந்த இடத்திற்கு முன்பாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் சிறியளவில் முன்னெடுக்கப்பட்டிருந்த போராட்டம் தொடர்ந்தும் இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

இதேவேளை, நேற்று மாலை அறிவிக்கப்பட்டபடி தாய்லாந்துப் பிக்குகள் நிகழ்விடத்திற்கு வருகை தரவில்லை. அவர்கள் கடற்படைப் படகுகள் மூலம் திருகோணமலை நகர இறங்குதுறைக்கு அழைத்து வரப்பட்டு, உட்துறைமுக வழியாகத் தமது கண்டி நோக்கிய பாத யாத்திரையைத் தொடங்கினர்.

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் தமிழினம் கொத்துக் கொத்தாகக் கொன்றழிக்கப்பட்டதை அடையாளப்படுத்தி முள்ளி வாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் வாரம் ஒவ் வொரு ஆண்டும் மே மாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்பட்டு வருவதோடு 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் முற்றத் திலே மாபெரும் நினைவேந்தல் நிகழ்வுகளும் இடம்பெறு வது வழக்கம்.

தமிழ் இனப் படுகொலையின் நினைவாக இந்த ஆண்டு பல பகுதிகளிலும் 'முள்ளிவாய்க் கால் கஞ்சி' வழங்கும் நிகழ்வுகள் பல தரப்பினராலும் ஒழுங்கமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன. வடக்கு, கிழக்கு மாவட்டங்கள் பலவற்றிலும் இந்தக் கஞ்சி வழங்கல் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இதன் மற்றொரு அங்கமாக முல்லைத்தீவில் இருந்து குறித்த முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்திப் பவனி தொடங்கப்பட்டிருந்தது.

மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் பகுதிகளுக்கும் செல்லும் இந்த ஊர்தி மீண்டும் கிளிநொச்சி மாவட்டம் ஊடாக முள்ளிவாய்க்கால் முற்றத்தை மே 18 வந்தடையும் என்று இதன் ஏற்பாட்டாளாகிய தாயக நினைவேந்தல் அமைப்பினர் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஜனாதிபதி அழைத்தால் பேச்சுக்குச் செல்வோம்; சம்பந்தனின் காலத்திற்குள்ளேயே தீர்வுவேண்டும்

## என்கிறார் ஹக்கீம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுகளை மேற்கொள்வதற்காக இதயசுத்தியுடன் அழைப்பு விடுத்தால் நாம் அதில் பங்கேற்பதற்கு தயாராகவுள்ளோம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்த்தரப்புக்களை அழைத்துள்ளமை தொடர்பாகவும் தமிழ் முஸ்லிம் தரப்புக்களுக்கு இடையிலான சுமுகமான பேச்சுகள் முன்னெடுக்கப்படுமா என்பது தொடர்பிலும் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்காக தமிழ்த் தரப்பை பேச்சுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மலையக தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் தரப்புக்களையும் தனித்தனியாக சந்திப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வைக் காண்பதற்காக இதயசுத்தியுடன் எமக்கு அழைப்பு விடுக்கும் பட்சத்தில் நாம் அதில் பங்கேற்பதற்குத் தயாராகவே உள்ளோம்.

குறிப்பாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, உள்நாட்டுக்கும் வெளிநாட்டுக்கும் காண்பித்து அதன் ஊடாக தேர்தல் அரசியல் நன்மைகளை அடைவதற்கான முனைப்பைச் செய்வது முழுமையாகத் தவிர்க்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் அனைத்து தரப்பினரும் உறுதியாக இருக்க வேண்டும்.

தற்போது நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்து அடைந்துள்ளது. இந்த நிலைமையிலிருந்து நாட்டை முன்னெடுத்துச் செல்வதாக இருந்தால் அனைத்து சமூகங்களினதும் ஒத்துழைப்புக்கள் அவசியமாகின்றது. இந்தப் புரிதல் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், இனவாதிகளும் அடிப்படைவாதிகளும் தற்போது மௌனித்துப்போயிருக்கின்ற தருணமாகவும் உள்ளது. அத்துடன், கடும்போக்கு அரசியல் வாதிகளையும் ஜனாதிபதியின் தலைமைத்துவமே கையாள்கின்றது.

ஆகவே, தற்போது ஏற்பட்டிருக்கின்ற தருணமானது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மிகப்பொருத்தமானதொரு தருணமாகும் என்றே நாம் கருதுகின்றோம். அவ்வாறான நிலையில் தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நீடித்துக்கொண்டிருக்கும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். ஆனால், அண்மைய காலத்தில் இந்தநாட்டில்ஆட்சியைத்தீர்மானிப்பவர்களாக தம்மைக் கருதுகின்ற சிங்கள, பௌத்த அடிப்படைவாதத்தில் மூழ்கிப்போயிருக்கின்ற சில தேரர்களும் அரசியல்வாதிகளும் அவ்வப்போது, கிளர்ந்தெழுகின்ற நிலைமைகள் காணப்படுகின்றது.

இவர்கள் போலியான பிரசாரத்தை முன்னெடுத்து வீணான பிரச்சினைகளை மீண்டும் தோற்றுவிப்பதற்கே முயற்சிக்கின்றார்கள்.

குறிப்பாக, அதியுச்சமான நற்சிந்தனைகளை அருளிய கௌதம புத்தபெருமானை எல்லைக்கற்கள் போன்று பயன்படுத்தி இந்த நாடு பௌத்த நாடு. அது சிங்களப் பெரும்பான்மையினருக்கே சொந்தமானது என்ற தோற்றப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்ல சில விடயங்களை முன்னெடுத்தாலும் இனவாத, அடிப்படைவாதசக்திகள் மீண்டும் பூதாகரமாக தலைதூக்குவதற்கு இடமளிப்பதானது அனைத்தையும் சீர்குலைத்துவிடும். அது மட்டுமன்றி அவர் மீதான நம்பிக்கையை யும் ஏற்படுத்தாது.

ஆகவே இனங்க ளுக்கு இடையிலான நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு இந்த விடங்களை முளையிலேயேகளைந்து விடுவது பொருத்தமானதாகும். – என்றார்.

இவ்வாறான நிலையில்தமிழ்த்தலைமைகளுடன்முஸ்லிம்மக்களின் பிரச்சினைகள்தொடர்பில் பேச்சுகளைமுன்னெடுத்து இணக்கப்பாட்டைஎட்டுவது தொடர்பில் வினவியபோது, பதிலளித்த ஹக்கீம், தமிழ், மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் காணப்படுகின்ற சில நெருடல்களுக்கு இணக்கப்பாட்டின் அடிப்படையில் நிரந்தரமான தீர்வுகளைக் காண வேண்டும்.

தேர்தல் அரசியலுக்கு அப்பால் இந்த விடயத்தில் உள்ள யதார்த்தங்களை இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அந்த வகையில், சம்பந்தன் அவர்களுடன் தொடர்ச்சியாக பலசுற்றுப்பேச்சுக்களை முன்னெடுத்து வந்துகொண்டிருந்தோம். எனினும், அவருடைய முதுமை காரணமாக அச்செயற்பாடுகளை தொடரமுடியாதவொரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும்,அவருடையகாலத்துக்குள் தமிழ்,முஸ்லிம்மக்களினதுவிவகாரங்களுக்கு நிரந்தரமான முற்றுப்புள்ளிவைக்கவேண்டும் என்பது எமது நிலைப்பாடாகவுள்ளது.

அதேநேரம்,தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகித்த தரப்பினரும், ஏனைய தமிழ்த் தரப்புக்களும் பிரிந்து நிற்பது துரதிஷ்டமானதொரு நிலைமையாக உள்ளது. இந்த நிலைமைகளும் விரைவில் சீர்செய்யப்பட வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகவுள்ளது. – என்றார்.

# இந்தியாவின் சட்டவிரோதக் கடற்றொழிலுக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தல்

## சிலாபம் கடற்றொழிலாளர் அமைச்சரிடம் கோரிக்கை



இந்தியக் கடற்றொழிலாளர்கள் இலங்கை கடலில் மேற்கொள்ளும் சட்டவிரோதமான கடற்றொழிலை முற்றாக கட்டுப்படுத்த வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலாபம் பிரதேச கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அமைச்சருக்கு இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் –

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறி எல்லைதாண்டியசட்டவிரோத தொழில்முறை காரணமாக சிலாபம், புத்த ளம் பிரதேச கடற்றொழிலாளர்கள் மாத்திரமன்றி வடக்கு மாகாணத்தை சேர்ந்த கடற்றொழிலாளர்களும் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுவருகின்றனர்.

விரைவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவிற்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளமையில், குறித்த விஜயத்தின் போது கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்த சந்திப்பில் சிலாபம் மீன் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள சந்தை கட்டடத்தில் வியாபார நடவடிக்கையை முன்னெடுத்தல், சிலாபம்துறை முகத்தில் பொருத்தப்பட்டிருந்த வானொலி தொடர்பாடல் கருவியை பழுது பார்த்து செயற்படுத்தல், எக்ஸ்பிரஸ் பேர்ள் நட்டஈட்டினை சிலாபம் கடற்றொழிலாளர்களுக்கும் கிடைக்கச் செய்தல் மற்றும் எரிபொருளை குறைந்த விலை யில் பெற்றுக் கொடுத்து கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் செலவை கட்டுப்படுத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

# பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் பட்டியலை வழங்குக!

## வடமாகாண ஆளுநர் ஜீவன் கோரிக்கை



வடமாகாணத்தில் கடந்த மூன்று வருடங்களில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மற்றும் விடுப்புச்சான்றிதழைப் பெற்றவர்களின் பட்டியலை உடன் வழங்குமாறு ஆளுநர் ஜீவன் தியாராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

வடமாகாணத்தில் கடந்த மூன்று வருடங்களில் பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகுகின்றார்கள்.

திடீரென இடைநடுவில் கல்வியை நிறுத்தி விடுப்புச்சான்றிதழைப் பெறுகின்றார்கள் போன்ற விடயங்கள் அதிகரித்துள்ளதாகத் தொடர்ச்சியாக தகவல்கள் கிடைத்து வருகின்றன.

இந்த விடயம் சம்பந்தமாக நான் விசேட கரிசனையைச் செலுத்தியதன் அடிப்படையில்வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாகப் பாடசாலை அதிபர்களுக்கு அவ்விதமாக இடைவிலகிய மாணவர்களின் பட்டியலை வழங்குமாறு கோரியுள்ளேன்.

அண்மைய காலத்தில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுகின்ற மாணவர்கள் சமூகக் குற்றங்களுக்களில் ஈடுபடுதல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு இலக்காதல் ஆகிய விடயங்கள் தொடர்பிலும் எனக்கு தனிப்பட்ட முறையில் தகவல்கள் கிடைத்துள்ளன. ஆகவே, இந்த நிலைமைகளை நீடிப்பதற்கு இடமளிக்க முடி

யாது. நாட்டின் எதிர்கால சந்ததியினரைப் பாதுகாப்பது எமது பாரிய கடமையாகின்றது. அந்த வகையில் குறித்த பட்டியலைப் பெற்று உரிய நடவடிக்கைகள் அடுத்தகட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளன. – என்றார்.

# வவுனியாவில் மதுபோதையில் குழப்பம் ஏற்படுத்தினார் கிராம உத்தியோகத்தர்!

## அதிருப்தியில் மக்கள்

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் கிராமசேவையாளர் ஒருவர் மதுபோதையில் வந்து குழப்பத்தில் ஈடுபட்டார் எனக் கிராமமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தாண்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ளகிராமஅலுவலர்மண்டபத்தில் சமுர்த்தி உத்தியோகத்தரால் பொதுமக்களுக்கான இலவச அரிசி வழங்கும் செயற்பாடு சனிக்கிழமை காலை முதல் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போதுமண்டபத்துக்குச்சென்ற கிராமசேவகரங, நிவாரணம் வழங்கும் செயற்பாட்டிற்கு இடையூறுகளை விளைவித்ததுடன். மதுபோதையில் வந்து, பெண்களையும் திட்டினார் எனக்கிராமமக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில்சம்பவம்தொடர்பாக வவுனியா பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்து பிரதேச செயலகத்தை சேர்ந்த அதிகாரி ஒருவர் மேற்படி பகுதிக்கு வருகைதந்து நிலைவரத்தை சுமுகமாக்கியதுடன் கிராமசேவகரை அனுப்பி வைத்துள்ளார்.

எனினும் கிராமசேவகர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராமமக்கள் அதிகாரியிடம் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வருமானம் மீதான வரியை குறைப்பதில் அரசு கவனம்!



வருமானத்தின் மீதான வரியைக் குறைப்பதில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தி வருவதாக நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும், எதிர்காலத்தில் வரி வரம்புகள் மாற்றப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் திடீரென தீப்பற்றி எரிந்த மோட்டார் சைக்கிள்





வவுனியா நகர மத்தியில் சனிக்கிழமை மாலை மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்ததுடன் அதில் பயணித்தவர்கள் எவ்வித பாதிப்புமின்றி உயிர் தப்பியுள்ளனர்.

ஏ-9வீதியூடாக பயணித்துக்கொண்டிருந்த ரி.வி.எஸ் ரக மோட்டார் சைக்கிள் மணிக்கூண்டு கோபுரத்துக்கு அண்மித்த பகுதியில் சென்ற போது திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. அதில் பயணித்த கணவன், மனைவி, பிள்ளை ஆகியோர் உடனடியாக மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கி விலகி சென்றமையால் அவர்களுக்கு எவ்வித உயிராபத்துகளும் ஏற்படவில்லை.

தீப்பற்றிய மோட்டார் சைக்கிளின் தீயை கடும் போராட்டத்திற்கு மத்தியில் பொதுமக்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த சம்பவம் மோட்டார் சைக்கிளில் ஏற்பட்ட மின் ஒழுக்கினால் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாற்றம் என்பது இதுதானா?

ஓர் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற அரகலய போராட்டத்தின் போது இளைஞர்கள் மாற்றத்தைக் கோரினார்கள். ஆட்சிப் பொறிமுறை மாற்றத்தை அவர்கள் கோரினார்கள். ஆனால், ஆட்சி மாற்றம் மட்டுமே ஏற்பட்டது. இப்போது மாறிய ஆட்சியைத் தலைமைதாங்கும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இளைஞர்கள் கோரிய பொறிமுறை மாற்றம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது என்று அறிவித்திருக்கிறார்.

பத்தரமுல்ல வோடர்ஸ் ஹெட்ஜில் சனிக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் இளம் உறுப்பினர்களைத் தெளிவுபடுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் தொடக்க நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் கூறும் முறைமை மாற்றம் என்பது இந்த மேற்பார்வைக் குழுதான்.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் உதவியுடன் இலங்கை இந்த மேற்பார்வைக் குழுக்களை நிறுவியுள்ளது. நாடாளுமன்றத்தில் 17 துறைசார் மேற்பார்வை குழுக்களுக்காகப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி நாடாளுமன்றச் செயலாளரினால் 18 – 35 வயதுக்கிடையிலான 550 இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் இந்தத் துறைசார் மேற்பார்வை குழு செயற்படுவதோடு, திருத்தம் செய்யப்பட்ட நிலையியற் கட்டளை ஏற்பாடுகளுக்கு இணங்க முன்னெடுக்கப்படும் விசாரணைச்செயற்பாடுகளின் போது செயற்குழு தலைவர்களின் உதவிக்காக இளம் உறுப்பினர்கள் ஐவரை தெரிவுசெய்து அழைப்பு விடுக்க முடியும் என்ற அடிப்படையில் ஒவ்வொரு செயற்குழுவிற்குமான இளம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

நிதி வழங்கலை அனுமதித்தல் நிதியை ஈடுபடுத்தல், செலவிடுதல், சட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் கூட்டுத்தாபனங்களைக் கண்காணித்தல் உள்ளிட்ட பணிகள் மேற்பார்வைக் குழுக்களின் ஊடாகவே முன்னெடுக்கப்படுகின்றன. அதனால் சபை அமர்வில் பங்கேற்றல் மற்றும் உரையாற்றுதல் ஆகியவற்றை தவிர்ந்த ஏனைய அனைத்து பணிகளிலும் இவர்கள் பங்கெடுக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது நாடாளுமன்றச் செயற்பாட்டின் பங்காளிகளாக, இன்னும் ஒரு படி மேலே போனால் கண்ணிப்பாளர்களாக இவர்கள் செயற்படுவார்கள். அரசுத் தலைவரைப் பொறுத்தவரையில் இதுதான் இளைஞர்கள் கோரிய மாற்றம். அதாவது நாடாளுமன்றச் செயற்பாடுகளில் இளைஞர்களும் பங்கெடுப்பதற்கு இடமளிக்கப்படவேண்டும் என்கிற கோரிக்கையே அரகலய இளைஞர்கள் கோரி மாற்றம். இப்போது அந்த மாற்றத்தைத் தாம் நிகழ்த்தி விட்டார் என்று ரணில் கூறுகின்றனர்.

இது எவ்வளவு பெரிய அபத்தம். இந்த நாட்டை ஊழலால் நாசமாக்கிய, இனவாதத்தால் மதவாதத்தால் பிரித்தாண்டு சின்னாபின்னப்படுத்திய. முறையற்ற கொள்கைகளால் பொருளாதாரத்தை சிதைத்த, மக்களை விடுத்து ஆட்சியாளர்கள் சுகபோகத்தை அனுபவித்த ஆட்சி முறையை மாற்றியமைக்க வேண்டும் என்பதே இளைஞர்கள் கேட்ட மாற்றம். அந்த மாற்றம் நிகழவேயில்லை. அது நிகழ்வதற்கான வாய்ப்புக்களும் தெரியவில்லை.

நாடாளுமன்றத்திற்குள் 500 புதிய இளம் உறுப்பினர்களை இணைத்துக்கொள்வதன் மூலமும், அத்தயை இளையவர்களைக் கொண்டு ஊழல் பெருச்சாளிகளைக் கண்காணிப்பதன் மூலமும் எதிர்காலத்திலும் பெரும் மாற்றங்கள் எவையும் நிகழ்ந்துவிடா. இன்னும் சொல்லப்போனால் அந்த இளைஞர்களையும் ஊழல் வழியில் பயிற்றுவிக்கும் பயிலரங்கமாகத்தான் இது மாறுவதற்கு வழியை ஏற்படுத்தும். இதுதான் அரசியல் கட்சிகளிலும் நடந்து வருகின்றது. தலைவர்கள் ஊழல் பேர்வழிகளாக இருக்கையில் அவற்றில் இணையும் இளையவர்களும் அந்த வழியிலேயே மிக விரைவாக முன்னேறுவதைத்தான் காண்கிறோம்.

ரணிலின் இந்தத் திட்டமும் இதற்குப் பெரிதும் விதிவிலக்காக இருப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டிருக்கவில்லை. இந்த மாற்றமல்ல புதிய இலங்கையைப் படைப்பதற்காக இளைஞர்கள் கோரிய மாற்றம். அது இன்னும் நிகழ்த்தப்படுவதற்காகக் காத்திருக்கின்றது.

# நாட்டு மக்கள் ஆணை அரசுக்குக் கிடையாது!

### சுட்டிக்காட்டுகிறார் திஸ்ஸ



அரசாங்கத்துக்கு மக்களின் ஆணை கிடையாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் நடத்தப்பட உள்ள எந்தவொரு தேர்தலுக்கும் தமது கட்சி தயார் எனக் குறிப்பட்டுள்ளார்.

கினிகத்தேன பகுதியில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் ஆதரவு ஐக்கிய மக்கள் சக்கதிக்கே உண்டு என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# புதிய மின்சார சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றுக்கு!

### அமைச்சர் காஞ்சன தகவல்



மின்சாரசட்டமூலத்தைஉருவாக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தில்உள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அவர் தனது ருவிட்டர் பதிவில் கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இது சம்பந்தமான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் புதிய மின்சார சட்டமூலத்தின் இறுதி வரைவு இம்மாத இறுதியில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதோடு பின்னர் அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேயிலைக் கொழுந்து பறித்த பெண் தொழிலாளர்கள்மீது குளவிக்கொட்டு!

### 4 பேர் வைத்தியசாலையில்; அக்கரப்பத்தனையில் சம்பவம்

அக்கரபத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய நாகவத்தை தோட்டத்தில் தேயிலைக் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த பெண் தொழிலாளர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ள சம்பவம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குளவிக் கொட்டினால் பாதிக்கப்பட்டவர்களில் காயமடைந்த 4 பேர் சிகிச்சைக்காக தற்போது மன்ராசி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தேயிலைசெடிக்குள் இருந்த குளவிக் கூடுகலைந்ததாலேயே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இவர்கள் இலக்காகியுள்ளனர்.

# காலி மாவட்ட சாரணர் ஆணையாளர் பலப்பிட்டியவில் விபத்தில் உயிரிழப்பு!

### மகள் காயம்

காலி வீதியின் பலப்பிட்டிய பெரதுடுவ என்ற இடத்தில் பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த காலி மாவட்ட சாரணர் ஆணையாளர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த அவரது மகள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவிக்கின்றனர். அம்பலாங்கொட பிரஜாபதி கோதமி மகளிர் உயர்தர பாடசாலையின் ஆசிரியரும், காலி மாவட்ட சாரணர் ஆணையாளருமான பலப்பிட்டியைச் சேர்ந்த காமினி சேபால டி சொய்ஸா என்ற 56 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

# நாட்டில் 22 மில்லியன் மக்கள் தொகையில் 55 லட்சம் பேர் வறுமையில் உள்ளனராம்

### கபீர் ஹாசிம் பரபரப்புத் தகவல்



நாட்டில் 22 மில்லியன் சனத்தொகையில் 55 லட்சம் மக்கள் வறுமையில் இருக்கின்றனர். அதேநேரம் நிவாரணம் வழங்குவதில் உலகில் குறைந்த நிவாரணம் வழங்கும் நாடு இலங்கையாகும். அதனால் நிவாரண வீதத்தை அதிகரிக்க வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அஷ்வசும வேலைத்திட்டம் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

அரசாங்கத்தின் நலன்புரி நன்மை சட்டத்தை வரவேற்கிறோம். ஆனால் இந்த வேலைத்திட்டத்தை அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்வதில்லை.

ஏனெனில் அரசாங்கம் முன்னான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட 50 ஆயிரம் பட்டதாரிகளை அவர்களின் சேவையில் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆனால் 3 வருடங்களுக்கும் அதிக காலம் சேவையாற்றிவருபவர்களை அவர்களின் தொழிலில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசாங்கத்தின் இந்தத் திட்டத்தால் நாட்டில் வறுமை நிலை மேலும் அதிகரிக்கும் அபாயம் இருக்கிறது. அத்துடன் நல்லாட்சி அரசாங்க காலத்தில் 2015 முதல் 2019 வரையான காலப்பகுதியில் நாட்டின் வறுமை கோடு நூற்றுக்கு 11 வீதமாக இருந்தது. அதனை

எமக்கு ஓரளவு குறைக்க முடியுமாக இருந்தது. ஆனால் உலகவங்கியின் அறிகையின் பிரகாரம் 2020 முதல் இன்றுவரை வறுமைகோடு நூற்றுக்கு 25 வீதமாக அதிகரித்திருக்கிறது. ஆனால் இதனைவிட அதிகமாகவே இருக்கவேண்டும். நாட்டில் 22 மில்லியன் மக்கள் தொகையில் 55 லட்சம் பேர் வறுமை நிலையில் இருக்கிறனர். அதனால் நலன்புரி நன்மைகள் முக்கியமாகும். அதனை முறையாக அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். மேலும் நிவாரணம் வழங்குவதில் உலகில் குறைந்த நிவாரணம் வழங்குவது இலங்கையாகும். மொத்த தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 0.6 வீதமே அதற்கு ஒதுக்கப்படுகிறது. இது போதுமானதாக இல்லை. அதேநேரம் நிவாரணம் இலக்குப்படுத்தும் வீதமும் குறைவாகும். அதனால் நிவாரண வீதத்தை அதிகரிப்பதுடன் அதனை இலக்குபடுத்தும் வீதத்தையும் அதிகரிக்க வேண்டும். என்றாலும் தற்போது அரசாங்கம் முன்வைத்திக்கும் திட்டத்தில் ஓரளவு அதிகரிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

அத்துடன் நலன்புரி நன்மையை பெற்றுக்கொள்ள 33 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். அதில் 22 லட்சம் பேரே தெரிவு செய்யப்பட இருக்கின்றனர். இது போதுமானதாக இல்லை. ஏனெனில் நாட்டில் 55 லட்சம் பேர் வறுமையில் இருக்கின்றனர் என உலக வங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் நாட்டில் சுய தொழில் போன்ற முறையற்ற தொழில்களில் 30 லட்சம் பேர் ஈடுபட்டு வருகின்றனர்.

கொவிட் தொற்றுக்கு பின்னர் இவர்களில் 17 லட்சம் பேர் தொழிலை இழந்துள்ளனர். இவர்கள் இந்த 22 லட்சம் பேரில் இல்லை. அதனால் அரசாங்கத்தின் நலன்புரி நிவாரண திட்டத்துக்கு இணைத்துக்கொள்ள வேண்டிய எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க வேண்டும் என்பதுடன் நிவாரண வீதத்தையும் அதிகரிக்க